வியாபாரிகளே
உங்களுக்குத்தேவையான
★ அழகு சாதன பொருள்கள்
★ தையல் பொருள்கள்
★ பாடசாலை உபகரணங்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
187, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00



★ எவர்சில்வர்
★ விளையாட்டுப் பொருள்கள்
★ பிளாஸ்டிக் பொருள்கள்
பெற்றுக்கொள்ள!
ஜெயா
அழகு மாடம்
187, மின் நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2026 தை 14 சனிக்கிழமை (28 – 01 – 1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 62


### பிரெஞ்சு நாளேட்டுக்கு சந்திரிகா பேட்டி

# இனங்களிடையே ஐக்கியத்தை உருவாக்கும் தீர்வே எம் இலக்கு

## அரசியல் லாபம் எதனையும் நாம் எதிர்பார்க்கவில்லை என்கிறார்

பாரிஸ், ஜனவரி 28

இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதன் மூலம் அரசியல் லாபங்களை நாம் எதிர்பார்க்கவில்லை. இனங்களுக்கிடையே ஐக்கியத்தை உருவாக்க வேண்டும் என்பதே எமது நோக்கம்.

பிரெஞ்சு நாளேடு ஒன்றுக்கு அளித்த பேட்டியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுக்கான பேச்சுக்குரிய சூழலை ஏற்படுத்துவதற்கே போர் இடைநிறுத்தம் அவசியம் என்றும,—

அரசியல் தீர்வு காண்பதற்கு செயற்படாத ஒரு நிலையில் பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து நடத்துவது பயனற்றதாகிவிடும் என்றும் – ஜனாதிபதி தமது பேட்டியில் தெரிவித்ததாக "ராய்ட்டர்" செய்தி நிறுவனம் தெரிவித்தது.

தனி பட்ட ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் கணிசமான அளவு ஆபத்துக்கள் தமக்கு இருக்கின்ற போதிலும் —

அவற்றை எல்லாம் பொருட்படுத்தாமல் இனப் பிரச்சினைக்கு சமாதான அரசியல் தீர்வு ஒன்றைக்காண தீவிரமான பிரயத்தனங்களை தமது அரசாங்கம் செய்து வருவதாகவும் சந்திரிகா தமது பேட்டியில் குறிப்பிட்டார்.

சந்திரிகா தமது பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது:–

தமிழ் மக்கள் சமாதானத்தை எதிர்பார்ப்பது எமக்கு தெளிவாக — சந்தேகம் எதுவும் இன்றி — தெரிகின்றது.

வடக்கின் புனரமைப்புப் பணிகளை ஆரம்பிக்க அரசு தயாராக உள்ளது.

ஆனால் –

வடக்கிலுள்ள முகாம்களை அகற்றுதல், பொருளாதாரத் தடையை நீக்குதல் ஆகிய விடயங்களை அரசியல் தீர்வுக்கான பேச்சுவார்த்தையை நடத்துவதற்கான முன் நிபந்தனைகளாக ஏற்றுக்கொள்வது நியாயமானதாகத் தெரியவில்லை — என்று கூறியுள்ளார். [அ-ஐ]

## தமிழ் எம். பிக்களின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 28

நாடாளுமன்றத்திலுள்ள தமிழ் எம். பிக்களின் பாதுகாப்பைப் பலப்படுத்த பொலிஸ் தலைமையகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

நாடாளுமன்றத்தில் தற்போது 27 தமிழ் எம். பிக்கள் உள்ளனர்.

இவர்களின் பாதுகாப்புக்காக தற்போது 2 பொலிஸ் உத்தியோகத்தர்களே அமர்த்தப்பட்டுள்ளனர். இந்த பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட உள்ளது.

புளொட் இயக்க உறுப்பினர்கள் பாதுகாப்பு அமைச்சு செயலாளரைச் சந்தித்து விடுத்த வேண்டுகோளை அடுத்தே தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட இருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்தி தெரிவிக்கிறது. (இ)

## மோட்டார் ஊர்தி பதிவுச் செயலகம்

### மன்னாரில் திறந்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

மன்னாரில் தமிழீழ மோட்டார் ஊர்திப் பதிவுச் செயலகம் சென்ற புதன் கிழமை முதல் தனது பணிகளை ஆரம்பித்தது.

செயலக அலுவலகம் சென்ற புதன் கிழமை மன்னாரில் திறந்து வைக்கப்பட்டது.

மன்னார் தளபதி லக்ஸ்மன் செயலக அலுவலகத்தை திறந்து வைத்தார்.

மோட்டார் ஊர்திப் பாவனையாளர்கள் தமது பதிவுகளை மேற்கொள்ள இதுவரை கிளிநொச்சிக்கு வந்து செல்லவேண்டியிருந்தது என்றும்.

மன்னாரில் இந்த அலுவலகம் திறக்கப்பட்டதால் இச்சிரமம் நீங்கியுள்ளது என்றும் மன்னார் மாவட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். (இ-4)

## ஸ்ரீலங்கா ராணுவ அணிகள் திருமலையில் இடம்மாற்றம்

யாழ்ப்பாணம், ஜன 28

திருகோணமலையில் ஸ்ரீலங்கா இராணுவ அணிகள் இடமாற்றம் செய்யப்படுகின்றன.

கடந்த 4 ஆண்டுகளுக்குப் பின்னர் இந்த இடமாற்றம் மேற்கொள்ளப்படுகிறது.

தம்பலகாமம் கோயில் குடியிருப்பு முகாமில்நிலைகொண்டிருந்த இராணுவத்தினர் இடமாற்றப்பட்டு அங்கு கப்டன் என். எஸ். திலகரட்ண தலைமையிலான இராணுவ அணி முகாம் அமைத்துள்ளது. இந்த அணி முன்னர் மூதூர் பகுதியிலுள்ள மீகடஸ்கொல முகாமில நிலை கொண்டிருந்தது.

மீகடஸ்கொல முகாமிற்கு கப்டன் கே. சி. தர்மசேன தலைமையிலான இராணுவ அணி அனுப்பப்பட்டுள்ளது. (இ-4)

## அலரி மாளிகையில் வெடிமருந்து: தீயநோக்கம் எதுவும் இல்லையாம்

கொழும்பு, ஜன. 28

அலரி மாளிகைக்குள் வெடிமருந்துகள் கொண்டுவரப்பட்டது தொடர்பான விசாரணைகளின் போது, அங்கு எந்தவித நோக்கத்தைக் கருதியும் அவை கொண்டுவரப்படவில்லை என்பது தெரிய வந்துள்ளது.

குற்றச் செயலைப் புரிவதற்கோ அதுபோன்ற வேறு எந்த நோக்கத்திற்காகவோ எந்தவிதமான சதி முயற்சியும் மேற்கொள்ளப்பட்டதற்கான சான்றுகள் கிடைக்கவில்லை என்றும் —

சென்ற மாதம் 25 ஆம் திகதி 530 கிராம் வெடிமருந்துப் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டமை விசாரணைகளில் இருந்து தெரியவந்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது.

சாதாரண தரத்திலுள்ள சில இராணுவ அதிகாரிகள் வழமையான பரிசோதனை மேற்கொண்ட சமயம் இந்த வெடி மருந்து கண்டுபிடிக்கப்பட்டது.

ஆனால் அந்த அதிகாரிகள் தமது உயரதிகாரிகளுக்கு இந்த விடயம் பற்றி அறிவிக்காமல் இருந்து விட்டார்கள் இருந்த போதிலும் வெடிமருந்தைக் கைப்பற்றவும் அவற்றை அலரி மாளிகை வள

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசியல் காரணங்களுக்காக காப்புறுதி கூட்டுத்தாபன நிதி

### விசாரணை நடைபெறுவதாக தெரிவிப்பு

கொழும்பு, ஜன 28

ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் நிதி அரசியல் காரணங்களுக்காக செலவிடப்பட்டது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டிருப்பதாக அதன் தலைவர் கலாநிதி ஜயந்த விக்கிரமசிங்கா தெரிவித்துள்ளார்.

40 லட்சத்துக்கு மேற்பட்ட தொகைப்பணம் அரசியல் காரணங்களுக்காக செலவிடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஸ்ரீ ஜெயவர்த்தன புர பல்கலை மூடப்பட்டது

### மாணவரிடையே மோதல்

கொழும்பு, ஜன 28

மாணவர்களுக்கு இடையே ஏற்பட்ட கோஷ்டிமோதலைத் அடுத்து கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் நேற்று முதல் காலவரையறையின்றி மூடப்பட்டது.

மாலை 4 மணிக்கு முன்னர் சகல மாணவர்களும் வளாகத்தில் இருந்து வெளியேறிவிட வேண்டும் என்று பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்தது.

கடந்த புதன் இரவு பல்கலைக்கழக போசன சாலையில் இரு மாணவர்களிடையே ஏற்பட்டதாகக் கூறப்படும் சச்சரவு பின்னர் குழுமோதலாக மாறியது.

இரு அணிகளாகப் பிரிந்து மாணவர்கள் மோதலில் ஈடுபட்டனர். அச் சம்பவத்தில் 10 பேர் படுகாயமடைந்தனர். இச் சம்பவத்தை அடுத்து தோன்றிய நெருக்கடி நிலையைத் தொடர்ந்தே பல்கலைக்கழகம் காலவரையறையின்றி மூடப்பட்டது. (ஐ 4)

## கல்வி மேம்பாட்டுப் பேரவை பரிசளிப்பு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

இன்று நடைபெற ஏற்பாடாகியிருந்த தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பரிசளிப்பு விழா தவிர்க்க முடியாத காரணங்களினால் சில தினங்களுக்கு பின்போடப் பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (இ)

## மத்திய—மாநில அரசுகள் சப்ரகமுவாவில் இழுபறி

கொழும்பு, ஜன 28

சப்ரகமுவ மாகாணத்துக்கென இதுவரை ஆளுநர் ஒருவர் நியமிக்கப்படாததன் காரணமாக பெரும் அரசியல் நெருக்கடி ஒன்று ஏற்படும் அபாயம் தோன்றி உள்ளது. மத்திய அரசும் மாகாண அரசும் இழுபறி நிலையில் இருந்து வருகின்றன.

சப்ரகமுவ மாகாண ஆளுநராகக் கடமை யாற்றிவந்த ஈ. எல். சேனநாயக்கா கடந்த டிசம்பர் 31 ஆம் திகதி ராஜினாமாச் செய்துவிட்டார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநர் பதவிக்கு, ஈ.எல். சேனநாயக்காவின் இடத்துக்கு திருமதி தமரா குமாரி இலங்கரத்தினா நியமிக்கப்பட்ட போதிலும் அப்பதவியை ஏற்க அவர் மறுத்துவிட்டார்.

இதற்கிடையில் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் மாகாண சபை அங்கத்தவர்கள் சிலரும் ஸ்ரீ. ல. சு. க. பிரமுகரான பியதாஸ பெலேந்தகமவை ஆளுநராக நியமிக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவையும் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவையும் கோரிவருவதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர் நியமனம் தொடர்பாக மத்திய அரசுக்கும் சப்ரகமுவ மாகாண சபைக்கும் இடையில் இழுபறி தோன்றி உள்ளது.

தேசிய கல்வி ஆணைக்குழுவால் நியமிக்கப்பட்டுள்ள தற்போதைய சப்ரகமுவ

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அதிகாரியை சுட்டவிமானி தற்கொலை

கொழும்பு, ஜன 28

திருகோணமலை விமானப் படை முகாமில் வைத்து விமானப்படை அதிகாரி ஒருவரை அங்கு பணிபுரியும் விமானி ஒருவர் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன. [ஐ]

# நாடுதிரும்பும் அகதிகளின் பாதுகாப்பு குறித்து ஸ்ரீலங்கா அரசு உறுதிமொழி தரவில்லை

### அகதிகளுக்கான பிரிட்டிஷ் நிறுவனம் தெரிவித்தது

லண்டன், ஜன. 28

நாடு திரும்பும் அகதிகளின் பாதுகாப்பு குறித்து ஸ்ரீலங்கா அரசு எந்தவித உறுதிமொழியையும் தரவில்லை என்று அகதிகளுக்கான பிரிட்டிஷ் நிறுவனம் தெரிவித்துள்ளது.

மேற்கு நாடுகளில் உள்ள ஈழ அகதிகளின் நிலை குறித்து பி. பி. ஸியில் ஒலிபரப்பான ஆய்வுரை ஒன்றில் இத்தகவல் வெளியிடப்பட்டது.

சுமார் 300 ஈழத் தமிழ் அகதிகளை இலங்கைக்குத் திருப்பி அனுப்ப நோர்வே அரசு திட்டமிட்டுள்ளது.

இலங்கையில மனிதஉரிமைகள் நிலைமை மேம்பட்டிருப்பதாக நோர்வே அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் அகதிகள் நலன் பேணும் அமைப்புக்கள் இதனை ஏற்கவில்லை.

பெரும்பாலான மேற்கு நாடுகள் நோர்வேயை பின்பற்றி தமிழ் அகதிகளை திருப்பி அனுப்ப திட்டமிட்டு வருகின்றன எனவே ஐரோப்பாவில் உள்ள இலங்கை அகதிகளின் நிலை என்ன?

கடந்த ஆகஸ்டில் பதவிக்கு வந்த பொ. ஐ. முன்னணி அரசின் பேச்சும் செயலும் மேற்குலக நாடுகள் அகதிகள் தொடர்பான தமது சட்டங்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டா தலைமையில் தமிழ் எம்.பிக்கள்

### இணைந்து செயற்பட முயற்சி

கொழும்பு, ஜன 28

அரசமைப்பு சீர்திருத்த பிரேரணை தொடர்பான விவாதத்தின் போது நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 27 தமிழ் எம். பிக்களும் ஏகோபித்த குரலில் கருத்துக்களை தெரிவிக்க விருப்பதாக அறியவந்தது.

அரசமைப்பு சீர் திருத்தப் பிரேரணையில் உள்ள பாதக, சாதக நிலை குறித்து ஏகோபித்த கருத்தை தமிழ் எம். பிகள் தெரிவிக்கும் வகையில் சகல தமிழ் எம். பிகளும் கூட விருக்கின்றனர்.

அமைச்சர் தொண்டமான் தலைமையில் தமிழ் எம் பிகள் இயங்க முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. [ஐ 3]


யாழ். றோட்டறிக் கழகத்தின் ஆதரவுடன்
யாழ். மாவட்ட அமெச்சூர் மெய்வல்லுநர் சங்கம் நடத்தும்
★ யாழ். மாவட்ட தடகள விளையாட்டு விழா ★
பெப்ரவரி 4, 5 ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில்
JAFFNA DISTRICT AAA
[சி-448]
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

**விற்பனைக்கு**

முட்டை இடத் தொடங்கி நான்கு மாதங்கள் நிரம்பிய கோழிகள் விற்பனைக்குண்டு. அத்துடன் பிறிமா லேயர் மாஷ் போன்றன மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். ராஜா மில், தாவடி. [34881]

சகல கால்நடை மருந்துகள், உபகரணங்கள் குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர், 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தை உடி, நல்லூர். (34832)

Broiler இறைச்சிக் கோழிகள் காலை 7மணி தொடக்கம் சுத்தம் செய்த குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம். அடைவைக்கக்கூடிய நல்லினக் கோழி முட்டைகள், பெரிய சாப்பாட்டு முட்டைகள் மற்றும் இதரை வாழைக்குட்டிகள் எப்பொழுதும் பெற்றுக் கொள்ளலாம். நல்லூர் வீடியோ சென்ரர். [34833]

**எருவிற்பனைக்கு**

யாட்டு எரு எம்மிடம் விற்பனைக்குள்ளது. தொடர்பு: "மில்க்வைற்" (சி-439)

**WANTED**

Applications are invited from Suitable candidates for the post of Cost Accounts clerk cum Store clerk. age below 40 years Apply before 31st Jan 19 5 No 754, C/o Uthayan Jaffna. [சி-444]

**துர்க்கா திருமண சேவை**

எல்லா மதத்தவர்களும் தொடர்புகொள்ளவும் சகல குறிப்புகளும் உண்டு. எல்லா நாட்களிலும் படம் குறிப்புடன் தொடர்புகொள்ளலாம். தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி: துர்க்கா திருமண சேவை, 'வளர்மதி இல்லம்', கே. கே. எஸ். றோட். மல்லாகம். [7875]

**ரி. வி., டெக் திருத்துதல்**

சகல றேடியோகள் ரி.வி. டெக் எல்லா விதமான மணிக்கூடுகளையும் பழுது பார்த்துக்கொள்ள டில்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரியகுளம்சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. [சி-254]

**புலமைப் பரிசில் - 95**

யாழ் Bond நிறுவனததாரால் ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான பயிற்சி வினாத்தாள்கள் (கணிதம், தமிழ் விடைகளுடன் 10/- மட்டும்) மாதத்தில் 2ஆவது, 4ஆவது ஞாயிற்றுக்கிழமைகளில் வெளியிடப்படுகின்றன. முன்னணி புத்தக நிறுவனங்களில் பெற்றுக்கொள்ளலாம். [8187]

## கண் சோதனை முகாம

தென்மராட்சி, ஜன 28

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் நடத்தும் கண் பரிசோதனை முகாம் நாளை ஞாயிறு காலை 9-00 மணிக்கு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறும். (ஓ-117)

## 18 பேர் பலி

பொன். ஜன. 28

ஐரோப்பாவின் வடக்கு பகுதியில் பெய்து வரும் கடும் மழை மற்றும் பனிப் புயல் காரணமாக ஆறு குழந்தைகள் உட்பட 18 பேர் உயிரிழந்துள்ளனர்

ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் நெதர்லாந்து போன்ற நாடுகளின் பெரும் பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப் பட்டுள்ளன.

மேற்கு பிரான்ஸ் பகுதியில் தற்போது பெய்துவரும் மழை கடந்த 150 ஆண்டுகளில் இல்லாத அளவைக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. (ஐ)

மலிவு விலையில் (15/-)

மாதுளம்

ஆண்டு மலர் (34868)

---

# ஐடியல் கல்வி நிலையம்

42/1, பிப்பங்குளம் லேன், வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். (யாழ். தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில்)

## G. C. E. (O/L) - 1995 விசேட வகுப்புக்கள்

**ஆரம்பம்: 31 - 1 - 1995**

விஞ்ஞானம் — இரா செல்வவடிவேல்
கணிதம் — எஸ். சண்முகநாதன்
ஆங்கிலம் — றி. சகாதேவன்
சமூகக்கல்வி — எம். இக்னேஷியஸ்

(மாதாந்தப் பரீட்சைகள் நடைபெறும்)

- ✶ ஆண்டு 5 - புலமைப் பரிசில் வகுப்புக்கள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.
- ✶ விசேட ஆங்கிலம் - 2 பிரிவுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாணவர்களின் அறிவுத் தரத்திற்கேற்ப சேர்ந்துகொள்ளலாம்.
- ✶ சிங்கள வகுப்புக்கள் - 1 ஆம் பிரிவு ஆரம்பமாகி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

[8214]

---

# BECON

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**B. A. B. COM PART - I** (யாழ்ப்பாண பல்கலைக்கழகம்)

பேராதனைப் பல்கலை B. A. FINAL

பிரிவு I புதன், வெள்ளி 6 30 — 7-30 a m

**ஆரம்பம்:- 1 - 2 - 1995** புதன்

பிரிவு II சனி ஞாயிறு 3 00 — 4 00

**ஆரம்பம்:- 4 - 2 - 1995** சனி 6-30

பொருளியல்

**S. வரதராஜன்**

(ஜ-323)

---

# JASSEWA

தொழில் பயிற்சி நிலையம்

இல. 140, பலாலி வீதி, திருநெல்வேலி.

தமிழ் / ஆங்கில தட்டச்சு பயிற்சி வகுப்புக்கள்

**ஆரம்பம்: 1 - 2 - 1995**

காலை 9-00 — 4-00

உடன் தொடர்பு கொள்ளவும்.

(34880)

---

# நிரு பட்டப்படிப்புப் பிரிவு

கோண்டாவில் (யாழ்ப்பாணம், பேராதனை.)

1995 இல் பரீட்சை எடுக்கும் மாணவர்களுக்கான

**துரித மீட்டல் வகுப்பு**

G. A. Q. / Ist. in Com. 1995

பொருளியல்: திரு உதயன் (B. B. A) SP

**ஆரம்பம்: 01 - 02 - 1995**

மாலை 5 மணி

(சி/406)

---

# இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்

யாழ். கிளைத் தலைமையகம்

அங்கத்தவர்களுக்கான

## அறிவித்தல்

1995ஆம் ஆண்டுக்கான அங்கத்துவப் பணத்தை பிரிவினூடாக கிளையில் 13 02-1995க்கு முன்னதாக செலுத்தியவர்களே 1995 பிரிவுத் தேர்தலிலும், கிளைத் தேர்தலிலும் போட்டியிடவோ, வாக்களிக்கவோ, பங்குபற்றவோ தகுதியுடையோராவர்.

கௌரவசெயலாளர்,
இ. செ. ச, யாழ். கிளை.

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம். (சி/445)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



## திருமதி சிசிலியா அருளானந்தம்

மலர்வு: 07 — 11 — 1926 உதிர்வு: 29 — 12 — 1994

பாசத்தின் உறைவிடமாய், பொறுமைக்கோர் திருவுருவமாய் இப்பூவுலகில் வாழ்ந்து எம்மைப் பாசத்துடனும், பரிவுடனும் வளர்த்து ஆளாக்கிய எங்கள் அன்புத் தாயே! உங்கள் ஆத்மா நித்திய வாழ்வில் பங்குகொள்ள இறைவனருளை வேண்டி நிற்கிறோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"மாசில்லா மாளிகை",
அச்சுவேலி. (24873)

---

சமுதாய முன்னேற்றக் கழகம்
நீர்வேலி

பாலர் பகல் விடுதி-பாலர் பாடசாலை 40ஆம் ஆண்டினையொட்டிய

# கலை விழாவும், பரிசளிப்பு விழாவும்

காலம்: **28.01.95** சனிக்கிழமை பி.ப.2மணி
இடம்: கழக முன்றில்
தலைவர்: திரு. வே. சி. அப்புத்துரை அவர்கள் (சமுதாய முன்னேற்றக் கழகம், நீர்வேலி)

சிறப்பு விருந்தினரும் பரிசு வழங்குபவரும்:
திரு. க. கேதீஸ்வரன் அவர்கள் (செயலர், பிரதேச செயலகம்-வலி கிழக்கு, கோப்பாய்)

தேசியக் கொடியேற்றி வைப்பவர்:
திரு. க. சிறீதர் அவர்கள் (தமிழீழ விடுதலைப் புலிகள் பொறுப்பாளர், வட்டவை கோப்பாய-நீர்வேலி)

**சிறப்புரை நிகழ்த்துபவர்கள்**

திருமதி கனகாம்பிகை சிவராசா
(குழந்தைகள் நலன் காக்கும் திணைக்களம், பிரதேச செயலகம் – கோப்பாய்)

திரு வி. கணேசராசா
அதிபர், அத்தியார் இந்துக்கல்லூரி - நீர்வேலி)

திரு. பொ. காசிநாதன்
சௌக்கியப்பகுதி அலுவலகம், கோப்பாய்)

திரு. க செல்வநாயகம்
(பாலர் பகல் விடுதி, பாலர் பாடசாலை பெற்றோர் சார்பு உறுப்பினர்-நீர்வேலி)

**கலை நிகழ்ச்சிகள்**

குழந்தைகள் கலை நிகழ்ச்சிகள்

இசையரங்கம்:
தமிழீழ முன்னணிக் கலைஞர்கள் வழங்கும்

## "இன்னிசை மாலை"

நாடக அரங்கம்:
யாழ். திருமறைக் கலாமன்றம் வழங்கும்

## ★ ஔவையார் ★

தமிழீழ விடுதலைப்புலிகள் கலை பண்பாட்டுக் கழக கோப்பாய் வட்டம் வழங்கும்

## அலைகள் ஓய்வதில்லை

(நாட்டிய நாடகம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வே. சி. அபபுத்துரை, தலைவர்:
ந. சேரினா நாயகி, பொதுச் செயலாளர்

அனபளிப்பு:

**வினோ நகைப் பூங்கா**

தங்க வைர நகை வியாபாரம்

உரிமையாளர், சடாச்சரம் புவிச்சந்திரன்

இல: 185, சந்தோசம் தெரு (கஸ்தூரியார் வீதி) யாழ்ப்பாணம். (34765)

---

# ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 02 — 06 — 1921



மறைவு: 08 — 02 — 1994

## அமரர் V.K. இராசையா

(ஓய்வு பெற்ற C. T. B. போமன்)

**திதி: 28 – 01 – 1995**

எங்கள் மீது அன்புயிராய்த் திகழ்ந்து அறிவால் பண்பால் எங்களை வழி நடத்திய எம் தெய்வம் எம்மை விட்டுப் பிரிந்து ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் முகத்தினை மறக்க முடியவில்லையே! உங்கள் பிரிவால் நாளெல்லாம் தவிக்கிறோம். இறை பாதம் அடைந்த உங்கள் ஆத்ம சாந்திக்கு இறைவனை பிரார்த்திக்கிறோம்.

உங்கள் பிரிவால் துயருறும்;
மனைவி, மகன் மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

தகவல்:
இராசையா அன்னபூரணம்
பஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில். (34853)

---



சர்வ மத யோகாசன ஸ்தாபனம் இலங்கை



அகில இலங்கை
சர்வமத
யோகாசன
ஸ்தாபனத்தாரால்

நடத்த இருக்கும்

# விசேட யோக ஆசன செய்முறை
# அரங்கேற்று விழா

இடம்: நல்லூர், திவ்ய ஜீவன சங்க மண்டபம் (சட்டநாதர் கோயிலடி)
காலம்: 29 - 01 - 1995 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2மணி
தலைவர்: திரு. க. கேசவன் அவர்கள்
(உயர்நீதிமன்ற வழக்கறிஞரும், பிரசித்த நொத்தாரிசும்)

✶ அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ✶ (34800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மைலந்தனை படுகொலைகள்:

# மட்டு. மேல் நீதிமன்றத்தில் படையினரை ஆஜர் செய்க!

### மாகாண மேல்நீதிமன்ற ஆணையாளர் பணிப்பு

கொழும்பு, ஜன. 28

மட்டக்களப்பு மைலந்தனையில் 1992 ஒகஸ்ட் 9இல் இடம்பெற்ற படுகொலைகள் தொடர்பாக இராணுவத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ள 21 இராணுவத்தினரையும் —

எதிர்வரும் மார்ச் 15இல் மட்டக்களப்பு மேல்நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு வட-கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற ஆணையாளர் பொ. பாலவடிவேல் உத்தரவிட்டுள்ளார்.

மைலந்தனையில் இடம்பெற்ற 57 தமிழர்களின் படுகொலைகளில் 21 இராணுவத்தினர் சம்பந்தப்பட்டிருப்பதாக குற்றம் சாட்டப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு எதிரான வழக்கு பொலன்னறுவ மாட்ட நீதிமன்றில் இடம்பெற இருந்தபோதும், அச்சம் காரணமாக மனித உரிமை அமைப்புக்கள் போன்றவை அங்கு வழக்கை நடத்த வேண்டாம் என கோரிக்கை விடுத்திருந்தன. (ஒ)

## பொலீஸ் நிலையத்தை சூழ பலமான பாதுகாப்பு அரண்

மட்டக்களப்பு, ஜன. 28

வாழைச்சேனை பொலீஸ் நிலையத்தைச் சுற்றி மண்மேடு உருவாக்கி பாதுகாப்பு அரண் ஒன்றை பொலீஸார் அமைத்துள்ளனர்.

புல்டோசர்களைக் கொண்டு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ள மைதானத்தை உள்ளடக்கி இந்தப் பாதுகாப்பு அரண் அமைக்கப்பட்டிருக்கிறது.

அணைக்கட்டு போல் காட்சியளிக்கும் அரணுக்கு மேலாக மண் மூடைகளும் அடுக்கப்பட்டு ''சென்றி''கள் அமைக்கப்பட்டுள்ளன.

பொலீஸார் ஒரு சில தினங்களில் முழு மூச்சாக நின்று இந்தப் பாதுகாப்பு அரணை அமைத்து முடித்தனர். (ஒ)

## பூமி அதிர்ச்சி பாதிப்பு:

## ஜப்பானிய அகதிகள் சிலர் தற்கொலை செய்ய முயற்சி

டோக்கியோ, ஜன. 28

அண்மையில் ஜப்பானில் இடம் பெற்ற பூமி அதிர்ச்சியினால் பாதிக்கப்பட்டு தற்போது முகாமில் தங்கியிருக்கும் அகதிகளில் சிலர் தற்கொலை செய்து கொள்ள முயற்சிக்கின்றார்கள் என்று ஜப்பானிய பொலீஸார் அறிவிக்கின்றார்கள்.

வீடுகட்டுவதற்கான கடன்களைத்திருப்பி செலுத்துவதற்கான வசதியில்லாததாலும் தங்கள் வீடுகளைக் காப்புறுதி செய்யத் தவறியதாலும் தற்கொலை செய்துகொள்ள சிலர் முயற்சித்திருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன,

இந்த மாதம் 17 ஆம் திகதி இடம் பெற்ற பூமி அதிர்ச்சியைத் தொடர்ந்து 2 பேர் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்றும் கூறப்படுகின்றது.

மேலும் 3 பேர் எடுத்த தற்கொலை முயற்சி தோல்வியடைந்தது.

வேறொரு குடும்பத்தில் பெற்றோரும், அவர்களது மகள் ஒருவரும் கத்தியினால் தங்கள் கைகளில் உள்ள நரம்புகளை வெட்டி தற்கொலை செய்ய முயற்சித்தார்கள். (ஒ-4)

## மட்டு. மாவட்டத்தில்

# கூட்டம் கூட்டமாக வயல்களில் யானைகள்!

மட்டக்களப்பு, ஜன. 28

மட்டக்களப்பு மாவட்டத்தில் பல இடங்களில் உள்ள வயல்களிலும் யானைகள் கூட்டம் கூட்டமாகக் காணப்படுகின்றன.

வந்தாறு மூலைக்கு மேற்கே அமைந்துள்ள வயல்ப் பகுதிகளிலும், கிரிவட்டை, முறுத்தானை, தரவை, பூவாக்காடு போன்ற பகுதிகளில் யானைகளின் அட்டகாசம் மோசமாக இருப்பதாக விவசாயிகள் கவலையுடன் கூறுகின்றனர்.

பெருமளவு நெல் வயல்களையும் விவசாயிகளின் குடிசைகளையும் யானைகள் சேதமாக்கி நாசப்படுத்தியுள்ளன.

இதனால் இரவு வேளைகளில் மக்கள் அப்பகுதிகளில் தங்குவதற்கு அஞ்சுகின்றனர். [ஒ]

### இன்று

திருமறைக் கலாமன்ற கலை அரங்கில் இன்று சனிக்கிழமை மாலை 6-45 மணிக்கு மாதாந்த கலை நிகழ்ச்சியான கலைநிலா அரங்கு நடைபெறும்.

கலைநிலா அரங்கில் ''பல்லியம்'' இசை நிகழ்ச்சி மற்றும் ''நீதிகாத்தான்'' சிந்து நடைக் கூத்து ஆகியன இடம்பெறும். (ஒ-51)

### விண்ணப்ப திகதி நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

பொருளாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் நடைபெறஇருந்த 1994/95 க்கான வதிவிட வேளாண்மைப் போட்டி யாழ். மாவட்டத்தில் ஏற்பட்ட மழை காரணமாக 15-01-95இல் இருந்து மேலும் 30-01-95 வரை நீடிக்கப்பட்டுள்ளது என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் அறிவித்துள்ளது. (க)

### பரிசளிப்பு விழா

வல்வெட்டித்துறை, ஜன. 28

வல்வை மகளிர் மகாவித்தியாலய பெற்றார் தின விழாவும் பரிசளிப்பும் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி சு. நிர்த்தனசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராகப் பருத்தித்துறைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வே. தி. செல்வரத்தினம் கலந்துகொள்வார். [ஒ-155]

### கட்டாக்காலி நாய்களால் தொல்லை

வடமராட்சி, ஜன. 28

வடமராட்சிப் பகுதியில் கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

பொலிகண்டி, புலோலி ஆகிய பகுதிகளிலும், மந்திகை அரசினர் ஆதாரவைத்தியசாலை வளவிலும் நாய்களின் தொல்லை மிகமோசமாக உள்ளது. (ஒ-173)

### மண்டபத்துக்கு இனி வாடகை

தென்மராட்சி, ஜன. 28

சாவகச்சேரி நகரசபை சபா மண்டபத்தில் கூட்டங்கள் மற்றும் விழாக்கள் நடத்துபவர்கள் இனிமேல் வாடகைக் கட்டணம் செலுத்த வேண்டும்.

முதல் இரு மணித்தியாலத்துக்கு ரூபா நூறும் மேலதிக ஒவ்வொரு மணித்தியாலத்துக்கு 25 ரூபாவும் மண்டப வாடகைக் கட்டணம் அறவிடப்படும் என நகரசபை செயலாளர் சி. நடராசா அறிவித்துள்ளார். [ஒ-117]

# ஐ. தே. கட்சி சமாதானப்பேச்சை மிக உன்னிப்பாக அவதானிக்கிறது

### ரணில் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 28

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக அரசு விடுதலைப் புலிகளுடன் நடத்தி வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை நாம் உன்னிப்பாக அவதானித்து வருகின்றோம்.

''இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசு - புலிகள் முன் அரசியல் யோசனைகளை சமர்ப்பித்த பின்னர் அவற்றை ஆராய்ந்தே எமது அபிப்பிராயத்தைத் தெரிவிப்போம்''

இவ்வாறு ஐ. தே. கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருக்கிறார்.

ஐ. தே. க.வின் தலைமைச் செயலகமான சிறிகோத்தாவில் நடந்தபத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐ. தே. கவை மீண்டும் பலப்படுத்தி மறுசீரமைக்கும் நடவடிக்கைகள் எதிர்வரும் 29 ஆம் திகதி அனுராதபுரத்தில் ஆரம்பித்து வைக்கப்பட இருக்கின்றன.

அதைத் தொடர்ந்து நாடு முழுவதும் கட்சி மறுசீரமைப்புப் பணி மாவட்ட ரீதியாகவும் தொகுதி ரீதியாகவும் முன் எடுக்கப்படும் என்றார்.

## ஒளிவீச்சு வெளிவந்தது

யாழ்ப்பாணம், ஜன. 28

நிதர்சனம் நிறுவனத்தின் மாதாந்த வீடியோ சஞ்சிகையான ஒளிவீச்சு வீடியோ நாடாவின் டிசம்பர் மாத பிரதி வெளியிடப்பட்டுள்ளது.

பூமாஞ்சோலை இராணுவ முகாம் மீதான துணிகரத் தாக்குதல், ''நிறைவுபெறும் 1994 ஆம் ஆண்டு'' என்னும் அரசியல் விவரணம், 'உறவு' என்ற குறும்படம் என்பனவும் மற்றும் வழமையாக இடம் பெறும் அம்சங்களும் ஒளிவீச்சில் இடம்பெற்றுள்ளன.

இந்த ஒளிநாடா இன்று சனி மாலை 6 மணிக்கு ஸ்ரீதர் திரையரங்கில் இலவச காட்சியாக காண்பிக்கப்படும். (ஐ)

## ஸ்ரீலங்கா சுதந்திர தினமன்று

# பொலன்னறுவையில் சமாதானப் பேரணி

கொழும்பு, ஜன. 28

ஸ்ரீலங்காவின் சுதந்திர தினமான பெப்ரவரி 4 ஆம் திகதியன்று பொலன்னறுவையில் சமாதானப் பேரணி ஒன்றை நடத்தப் போவதாக தேசிய சமாதான கவுன்ஸில் அறிவித்துள்ளது.

சகல இனங்களையும் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் அதிகமானோர் இந்தப் பேரணியில் பங்கு பற்றுவர் என்று தேசிய சமாதானக் கவுன்ஸில் அமைப்பாளர் அஜித் ரூபசிங்க தெரிவித்தார். (உ)

## சிங்கப்பூர் விமான நிலையத்தில்

## பாதையை விட்டு விலகி ஓடிய எயர் லங்கா விமானம்

கொழும்பு, ஜன. 28

கொழும்பில் இருந்து சிங்கப்பூருக்குச் சென்ற எயர் லங்கா விமானம் ஷங்கே விமான நிலையத்தில் தரையிறங்கும் வேளை ஓடு பாதையை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியதாக அறிவிக்கப்படுகிறது.

சீரற்ற கால நிலை மற்றும் கடும் காற்று காரணமாகவே இந்தச் சிறு விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தினால் பயணிகள் எவரும் காயமடையவில்லை. (ஐ)

## 'கணபதியே' வருவாய் நூல் வெளியீட்டு விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 28

நவாலியூர் - நா. சச்சிதானந்தனின் ''கணபதியே வருவாய்'' என்ற கட்டுரைத் தொகுப்பு நூலின் வெளியீட்டு விழா நாளை ஞாயிறு பி. ப. 3மணியளவில் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தமிழீழ கலை இலக்கியப் பேரவையின் ஆதரவில் நடைபெறும் இந்நிகழ்வுக்கு துர்க்கா துரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமை வகிப்பார்.

சிவஸ்ரீ மு. ஜெயந்திநாதக் குருக்கள் இந்நூலை வெளியிட்டு வைக்க, திரு. செல்லப்பா நடராசா வெளியீட்டுரையை நிகழ்த்துவார். முதற் பிரதியை கலாசூரி. என். கே. பத்மநாதன் பெற்றுக் கொள்வார்.

கவிஞர் சோ. பத்மநாதன், பேராசிரியர் அ. சண்முகதாஸ், திருவாளர்கள் க. நாகேஸ்வரன், செ. சத்தியமூர்த்தி, எஸ். திலகநாயகம் போல், பிரம்மஸ்ரீ தி. நடனசபாபதி சர்மா, இ. ஜெயராஜ், புதுவை இரத்தினதுரை ஆகியோர் மதிப்பீட்டுரை வழங்குவர்.

அதன்பின் நூலாசிரியரின் பதிலுரையும், நாதஸ்வர வித்துவான் வி. கே. பஞ்சமூர்த்தியின் நன்றியுரையும் இடம்பெறும். [ஒ-5]

### தென்னம்பிள்ளை விநியோகம்

லுணுவில தென்னை ஆராய்ச்சி நிலையத்தில் இருந்து பெறப்பட்ட கலப்பின விரிய விதை தேங்காய் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட தென்னம் பிள்ளைகள் கமநல சேவை நிலையங்களில் விநியோகிக்கப்படுகின்றது.

இந்த இனம் நான்கு தொடக்கம் நாலரை வருடங்களில் பயன் தரவல்லதாக இருப்பதால் வீட்டுத் தோட்டங்களில் மூன்று தென்னம் பிள்ளைகளை நட்டுப் பராமரிப்பதன் மூலம் குடும்பத்தின் தேங்காய் தேவைகளை நிறைவு செய்ய முடியும் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவிக்கின்றது. (ஒ)

### விவசாயப்பயிற்சி வகுப்புகள்

யாழ்ப்பாணம், ஜன. 28

விவசாயிகளின் நன்மை கருதி அவர்களை ஊக்குவிக்குமுகமாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் விவசாயத் திணைக்களமும் இணைந்து நடத்திவரும் விவசாயப் பயிற்சி வகுப்பு இன்று 28ஆம் திகதி காலை 10மணிக்கு சங்கரத்தை சின்னம்மா மகா வித்தியாலயத்திலும்

31ஆம் திகதி 10மணிக்கு கல்லாணை ப. நோ. கூ. சங்கம், நாவற்குழி மேற்கு கிராம முன்னேற்றச்சங்கம் ஆகிய இடங்களிலும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (ஒ)

### சோதிடர் ஆய்வரங்கு

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழ் சோதிடர் ஆய்வு ஒன்றியத்தின் வாராந்த ஆய்வரங்கும், பயிலரங்கும் நாளை ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு ஆனைப்பந்தி உயர் கலைக் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

''நாக தோஷமும், பரிகாரமும்'' என்ற தலைப்பில் திரு. ஐயா சச்சிதானந்தமும், ''சோதிட நுணுக்கங்கள்'' என்ற பொருளில் எஸ். சிவதாசபிள்ளையும் ஆய்வுரை வழங்குவர்.

பயிலரங்கை திரு. கே. சாம்பசிவம் நடத்துவார். (ஐ)

### உளவளத் துணை அடிப்படை கற்கை நெறி

கொழும்பு, ஜன. 28

யாழ். பல்கலைக்கழகம் புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் உளவளத்துணை பற்றிய அடிப்படைக் கற்கை நெறி தொகுதி 4 இன் ஆரம்ப வைபவம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெற உள்ளது.

தொகுதி 5இற்கான ஆரம்ப கற்கை நெறி எதிர்வரும் 11 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.00மணிக்கு பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இடம்பெற உள்ளது. (இ)

## உருளைக் கிழங்கு பயிரில் வெளிறல் நோய்த் தாக்கம்

### உடன் கட்டுப்படுத்த வேண்டும்

கடந்த வாரம் பெய்த எதிர்பாராத கடும்மழை காரணமாகவும் தற்போதைய சுவாத்திய நிலை காரணமாகவும் உருளைக்கிழங்குப் பயிரில் பிற்கூற்று வெளிறல் நோய்த் தாக்கத்தைப் பரவலாகக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்நோய்த் தாக்கத்தை உடனடியாக கட்டுப்படுத்தாவிட்டால உற்பத்தியில் பாதிப்பு ஏற்பட இடமுண்டு.

இப்பூஞ்சண நோய் இலைகளின் ஓரங்களில் சிறிய சபில நிறப்புள்ளிகளாகத் தோன்றி பின் இவை கோண வடிவங்களில் உள்நோக்கிப் பெருகும் ஈரலிப்பான காலநிலையில் இப்புள்ளிகள் பெரிதாகி முழு இலையும் மஞ்சள் நிறமடைந்து 2-4 நாட்களில் கருகிவிடும். இறுதியில் பயிரின் மேற்பரப்பு கருமை நிறமாகி வாடுவதுடன் தொடர்ந்து தண்டுகளுக்கும் இலைகளுக்கும் பரவும் இதுகளின் கீழ்ப்புறத்தில் மென்மையான அல்லது சாம்பல் நிற பூஞ்சண வித்திகள் காணப்படும். இப்பூஞ்சண வித்திகள் கழுவப்பட்டு மண்ணுக்குள் சென்றால் கீழே தோன்றியுள்ள கிழங்கையும் தாக்கும்.

இப் பூஞ்சண நோயை கட்டுப்படுத்தக் கீழே காட்டப்பட்டுள்ள பூஞ்சண நாசனிகளில் ஏதாவது ஒன்றை இலைகளின் கீழ்ப்புறம் நன்கு நனையும்படி விசிறவும்.

1. மன்கோசெப் — [மன்கோசெப் டைதேன், எம் 45. வொண்டசெப் 1 அவுன்ஸ் 2 கலன் நீரில்]

2. மனெப் — [மனெப்] மன்செற் டி — 1 அவுன்ஸ் 2 கலன் நீரில்]

3. புறோப்பநில்— [அன்றகோல் — 1 அவுன்ஸ் 2 கலன் நீரில்]

கடின தாக்கம் ஏற்படுமாயின் ரிடோமில் என்னும் பூஞ்சண நாசனியை 2 அவுன்ஸ்— 3 கலன் நீரில் கலந்து ஒரு முறை மட்டும் விசிறவும். அதன்பின் மேற்கூறியனவற்றில் ஒன்றைப் பாவிக்கவும்.

#### சிற்றுண்ணியின் தாக்கம்

வெப்பநிலை அதிகரிக்கும் போது சிற்றுண்ணியின் தாக்கமும் அதிகரிப்பதைக் காணக்கூடியதாக இருக்கின்றது சிற்றுண்ணிகள் இலைகளின் கீழ்ப்புறத்தில் இருந்து முக்கியமாக குருத்துப் பகுதிகளில் சாற்றை உறுஞ்சுவதால் இவ் இலைகள் செங்கபில நிறமாகி கீழ்நோக்கி சுருங்கும் தாக்கம் அதிகரிக்கையில நுனிப்பகுதிகளில் இருந்து பயிர் எரிந்தது போன்று கருகித் தோற்றமளிக்கும். தாக்கம் தொடங்கியவுடன் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படாவிட்டால் 2—3 நாட்களில் தோட்டம் முழுவதும் இத்தாக்கம் பரவும், எனவே இத்தாக்கத்தை கட்டுப்படுத்த உடனடியாக கீழே தரப்பட்டுள்ள பீடை நாசனிகளில் ஒன்றை இலைகளின் கீழ்ப்புறம் நன்கு நனைய விசிறவும்.

சல்பர் அல்லது சுப்பர்சிக்ஸ் 1 அவுன்ஸ் — 2 கலன் நீரில் கலந்து விசிறவும் பயிர்களில் கூடிய தாக்கம் ஏற்படின் மொறஸ்டான் 1 அவுன்ஸ் 6 கலன் நீரில் கலந்து விசிறவும். ★

— உதவி விவசாயப் பணிப்பாளர்

# இன்றைய கல்வி அமைப்பு முறையில் உடனடியாக அடிப்படை மாற்றம் தேவை

### கலாநிதி எதிர்வீரசிங்கம் கருத்து

யாழ்ப்பாணம், ஜன. 28

பல்கலைக் கழகப் பிரவேசத்தையே இலக்காகக் கொண்ட இன்றைய கல்வி அமைப்பு மாற்றி அமைக்கப்பட வேண்டும். பாடவிதானத்தை மாற்றுவதற்கு முன்னர் பரீட்சை முறையை மாற்ற வேண்டும்.

கிளிநொச்சி விவசாய பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளரான கலாநிதி என். எதிர்வீரசிங்கம் இவ்வாறு கருத்துத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் ஒழுங்கு செய்யப்பட்டு கடந்த 24 ஆம் திகதி யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பௌதீக விரிவுரை மண்டபத்தில் நடைபெற்ற சொற்பொழிவின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

கலாநிதி எதிர் வீரசிங்கம் ''வடக்கிற்கான கல்வித் திட்டங்கள்'' என்றும் பொருளில் உரை நிகழ்த்தினார்.

கலாநிதி எஸ். மகேசன் தலைமை வகித்த இந்நிகழ்வில் அவர் மேலும் கூறியதாவது:

1989 — 1990 ஆம் ஆண்டில் 3 லட்சத்து 53 ஆயிரத்து 730 மாணவர்கள் பல்கலைக் கழகப் பிரவேசப் பரீட்சைக்குத் தோற்றினார்கள். இவர்களில் 34 ஆயிரத்து 491 மாணவர்கள் பல்கலைக்கழகம் செல்லும் தகுதி பெற்றார்கள். ஆயின் 6 ஆயிரத்து 467 மாணவருக்கே பல்கலைக் கழகப் பிரவேசம் கிடைத்தது.

இந்த அமைப்பை நாங்கள் தொடர விடுவதா?

சமுதாயத்தில் வர்க்க ரீதியாகவும் இந்தப் பல்கலைக் கழகப் பிரவேச முறை மாற்றப்பட வேண்டியதாகின்றது.

மக்கள் தொகையில் 75சத வீதமான விவசாயம், மீன்பிடிக் குடும்பங்களில் இருந்து 16 சதவீதத்தினரும், 23 சத வீதமான எழுதுவினைஞர் முதலிய மத்திய தர வர்க்கக் குடும்பங்களிலிருந்து 22 சத வீதத்தினரும், மிதியான 2 சதவீத தொழிலாளர், வர்த்தகர்கள் குடும்பங்களிலிருந்து 62 சத வீதத்தினரும் இந்த ஆண்டில் பல்கலைக்கழகம் சென்றுள்ளனர்.

பல்கலைக்கழகம் தொடங்கிய காலத்திலிருந்து இந்த நிலைமை இருந்து வருகிறது.

இந்த விஷயத்தில் எங்களை அறியாமலே எங்களுடைய பாரம்பரிய சாதி அமைப்பு முறையும் செயற்படுகின்றது போலத் தெரிகின்றது.

பாடசாலைகளில் ''விட்டு விலகும்'' மாணவர்களின் தொகை அதிகரிப்பது கவலைக்குரியதோர் விஷயமாகும்.

உண்மையில் அவர்கள் ''விட்டு விலக''வில்லை. ''வெளியே தள்ளப்படுகின்றார்கள்''.

இதுதான் உண்மை.

இது அமைப்பில் உள்ள தவறே அல்லாமல் அவர்களின் தவறு அல்ல.

ஜி. சீ. ஈ சாதாரண தரப் பரீட்சைக்குப் பின்னர் 62 சதவீத மாணவர்கள் இவ்வாறு ''வெளியே தள்ளப்படுகிறார்கள்''.

அமைப்பு என்பது நாங்கள் தான். அதனை நாம் மாற்ற முடியும், மாற்ற வேண்டும்.

18 வயது வரை சகல மாணவர்களும், அவர்கள் விரும்பினால், படிக்கக்கூடியதாக கல்வி அமைப்பு அமைய வேண்டும்.

அது மட்டுமல்ல ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சைக்கு 4 பாடமாக்கல் திட்டமும் மாற வேண்டும்.

16 வயது மாணவரை நீங்கள் வாழ்க்கையில் என்ன செய்ய விரும்புகின்றீர்கள் என்று கேட்பது நகைப்புக்கிடமானது.

இப்போதைய கல்வி அமைப்பில் கூட்டுக் கல்வி அல்லது குழுவாக வேலை செய்தல் என்பது இம்மியும் கிடையாது.

தனி நபர் கல்வியும் போட்டிக் கல்வியும் தான் உள்ளன — என்றார்

அவர் மேலும் தெரிவித்ததாவது; எமது கல்வி முறையின் இலக்கு பல்கலைக்கழகம் புகுவதாகவேயுள்ளது. பல்கலைக்கழகத்திற்கு செரிவாவோர் எவ்வாறாயினும் தமது பட்டத்தை வாங்க ஏதுவாக கல்வி அமைந்துள்ளது. அவர்கள் எவரும் அனுமதிக்கப்பட்ட பின் வெளியேற்றப்படுவதில்லை.

அங்குள்ள கல்வி முறை பரந்துபட்டதன்று. அது ஒரு ஊசியின் துளை போன்றதே. சிறிதளவு விடயசாரமே கற்பிக்கப்படுகிறது. அதனால் அதில் மிதவையான அளவு அறிவு கிடைக்கின்றது. இன்றைய நடைமுறை உலகில் அச் சிறிய அறிவு போதுமானதல்ல. தவிரவும் பல வருடங்கள் கற்ற கல்வியை ஒரு சில மணி நேரத்தில் பரீட்சிக்கும் போது மாணவரது திறமை முழுமையாக வெளிக்காட்டப்படுவதில்லை.

எனவே எமது பரீட்சை முறைகள் மாற்றப்பட வேண்டும்; பரீட்சை முறை மாற்றப்படுவதற்கு முன், பரீட்சையின் அடிப்படையான பாடத் திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

இன்று நடைமுறையிலுள்ள கல்வி முறையானது வளர்ச்சியடைந்த நாடுகளின் கல்வி முறையினை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது கல்வி முறையினை வகுக்கும் போது எமது சமூக, பொருளாதார நிலைமைகளை கருத்திற் கொண்டு அதன் அடிப்படையில் பாடத் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும் அதுவே பயனுள்ள சிறந்த பெறுபேற்றைத் தரக் கூடிய பாடத் திட்டமாக அமையும்.

— இவ்வாறு அவர் தெரிவித்தார்.

உரையின் இறுதியில் பலர் எழுப்பிய கேள்விகளுக்கு கலாநிதி விடை அளித்தார் [ஒ-க-5]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.றோட்டறிக் கழகம் நடத்தும்

சர்வதேச றோட்டறியின்

## 90ஆவது ஆண்டு நிறைவு தமிழ் / ஆங்கில

# கட்டுரைப் போட்டி

சர்வதேச றோட்டறியின் 90ஆவது ஆண்டு நிறைவையொட்டி

பாடசாலை மாணவர்களுக்கான

தமிழ், ஆங்கில கட்டுரைப் போட்டிகளை எமது யாழ். றோட்டறிக்கழகம் நடத்தவுள்ளது.

**தலைப்பு தமிழில்:**

1. றோட்டறி - நட்பின் அடிப்படையில் சேவை.
2. ஈழத்தில் சமூக சேவை - றோட்டறிக் கழகத்துக்குச் சில ஆலோசனைகள்.
3. பொது வாழ்வின் அடிப்படை இலட்சணங்கள்.

**ஆங்கிலத்தில்:**

1. Rotary - Service based on Friendship.
2. Peace - The role of Rotary.
3. Youth Exchange and International Understanding.

**போட்டி விதிகள்:**

— **14** முதல் **18** வயது வரையிலான பாடசாலை மாணவர்கள் மட்டும் கலந்து கொள்ளலாம்.

— கட்டுரைகள் தாளின் ஒரு பக்கத்தில் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சில் பொறித்து அனுப்பப்பட வேண்டும்.

— சுமார் 1500 சொற்களுக்கு மேற்படாதிருக்க வேண்டும்.

— கட்டுரையாளரின் பெயர், முகவரி, பிறந்த திகதி என்பன தனித் தாளில் எழுதப்படுவதுடன், கட்டுரையாளர் பாடசாலை மாணவர் என்பதும், கட்டுரை அவருடைய சொந்த ஆக்கம் என்பதும் பாடசாலை அதிபர் அல்லது உப அதிபரால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

— போட்டிக்கான கட்டுரைகள் அனைத்தும் 1995 பெப்ரவரி 6ஆம் திகதிக்குப் பிந்தாமல் கீழ்க் கண்ட முகவரியில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

— தமிழ், ஆங்கில கட்டுரைகளில் தனித்தனியே முதல் மூன்று இடங்களைப் பெறும் கட்டுரைகளுக்கான தங்கப்பதக்கப் பரிசில்கள் 90ஆம் ஆண்டு நிறைவு விழாவில் வழங்கப்படும்.

— கட்டுரைகள் அனைத்தும் ''சர்வதேச றோட்டறியின் 90ஆம் ஆண்டு நிறைவு கட்டுரைப் போட்டி'' Essay Contest for 90th Anniversary of Rotary International'' என கடித உறையின் இடதுபக்க மேற்புறத்தில் குறிப்பிடப்பட்டு சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

— போட்டி முடிவுகள் பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்படும்;

தலைவர்
யாழ். றோட்டறிக் கழகம்,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-421)



## 36-ம் நாள் நினைவஞ்சலி



**திருமதி விஜயரட்னம் லிங்காதேவி**

மலர்வு: 22—06—1949

உதிர்வு: 24—12—1994

உன் உயிர் கொடுத்து என் உயிர் காத்த தெய்வமே, உங்கள் உயிரைக் கொடுத்து எங்கள் தந்தையைக் காத்த தெய்வத்தாயே, உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றும் பிரார்த்திக்கிறோம்.

இப்படிக்கு
கணவன், மக்கள், உறவினர்கள்

சொர்ணவடலி லேன்,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(34887)


## கோமாரி இன்று புறப்படுகிறது

கோமாரி கப்பல் இன்று சனிக்கிழமை கொழும்பு நோக்கி புறப்பட்டுச் செல்லும்.

இக்கப்பலில் 47 வெளியூர் தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்படுகின்றன.

(இ-173)

## வீர வணக்க கூட்டம் திங்களன்று

உடுப்பிட்டி வட்டத்தைச் சேர்ந்த ஜனவரி மாதத்தில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் வீரவணக்கக் கூட்டம் முன்னர் அறிவிக்கப்பட்டபடி இன்று நடைபெறமாட்டாது என்றும்—

அந்தக்கூட்டம் நாளை மறுதினம் திங்கட்கிழமை அதே நேரத்தில் நடைபெறும் என்றும் —அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

## தாதியர் பரீட்சை ஒத்திவைப்பு

நாளை நடைபெறவிருந்த சுகாதாரத் திணைக்களம் மற்றும் போதனா வைத்தியசாலை ஊழியர்களுக்கான மாணவ, தாதியார் பயிற்சிப் பரீட்சை ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை அடுத்தமாதம் 5ஆம் திகதி யாழ். தாதியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறும் என்றும்—

வினாத்தாள்களும் அனுமதி அட்டைகளும் நாளை மறுதினம் இங்கு வந்து சேரும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-4)

## செஞ்சிலுவை வெளியீடு

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் 11 ஆவது சஞ்சிகை வெளியீடு நாளை ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பளைப் பிரிவு ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறுவதற்கு முன்னதாக, மு.ப. 9 00 மணிக்கு யாழ். மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயத்தில் நடைபெறும்.

யாழ் கிளைத் தலைவர் வைத்தியகலாநிதி. த. சிங்கராஜா சஞ்சிகையை வெளியிட்டு வைக்க, தெல்லிப்பளைப் பிரிவுத் தலைவர் திரு சி. சிவமகாராஜா முதல் பிரதியை பெற்றுக்கொள்வார்.

(இ)

# மக்கள் குடியிருப்புப் பிரதேசங்களில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும்

## குடாநாட்டு அபிவிருத்திக்கு அது வழிகோலும்

*யாழ்ப்பாண குடாநாட்டின் அபிவிருத்தி தொடர்பான கட்டுரை ஒன்று இங்கு பிரசுரமாகுகிறது.*

யாழ்ப்பாணக் குடாநாடு தனிப் பண்புகளைக் கொண்டதொரு புவியியல் பிரதேசமாகும். அதன் சமூக விழுமியங்கள், கலை, கலாசார, பண்பாடுகள் தனித்துவம் நிறைந்தவை. நீண்டகாலமாக மக்கள் குடியிருப்புக்களைக் கொண்ட இப் பிரதேசத்தில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டுமாயின் அது மக்கள் சம்மதத்துடனேயே கொண்டுவரப்பட வேண்டும்.

யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் கடலோரங்களால் மூடப்பட்டு மூன்று பெரும் துண்டுகளாக விளங்குகின்றன. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் ஆகியவையே அப்பிரிவுகள். குடாநாட்டின் எந்தவொரு நிலமும் கடல் எல்லையில் இருந்து நான்கு அல்லது ஐந்து மைல்களுக்குட்பட்டு காணப்படுகின்றன. இதன் நிலப்பரப்பு சமதரையாகக் காணப்படுகிறது. அத்தகைய தேவைகளுக்கும் எக்காலத்திலும் இந்நிலம் பயன்படுத்தக் கூடியதாக உள்ளது.

### மண்வளம்

வித்தியாசமானதொரு மண்வளம் இங்கு காணப்படுகிறது. அடையற் கற்பாறைகள், சுண்ணக் கற்பாறைகள் செறிந்துள்ளன. இப்பாறைகளின் கீழ் நன்னீர் காணப்படுவதால் எப்பொழுதும் தொடர்ச்சியான நீர்ப்பாய்ச்சல் மூலம் பயிர் செய்ய முடியும்.

மலைப்பிரதேசங்களைப் போன்று மண்சரிவுகள், எரிமலைகள் டாதிப்புக்கள் இங்கு இல்லை.

காலநிலை பொதுவாக அயன மண்டலத்துக்குரியதாக இருப்பினும் மத்திய தரைக் காலநிலைக்குரிய சுவாத்தியமும் இங்கு காணப்படுகின்றது.

நிலத்தோற்றம், மண்வளம், காலநிலை சுவாத்தியம் போன்றவை காரணமாக இங்கு காய்கறிகளும், பழமரங்களும் செய்கைபண்ணப்படுகிறது. இவற்றோடு கடல்வளமும் இயற்கைவளங்களும் நிரம்பியது இக்குடாநாடு.

### 13ஆம் நூற்றாண்டு நிலை

13ஆம் நூற்றாண்டில் யாழ்ப்பாண இராச்சியம் ஆரம்பமானபோது இது ஒரு மையப் பரப்பாக இருந்தது. செறிவான மக்கள் கூட்டம் வாழ்ந்தது. விவசாயமே அவர்களின் பிரதான தொழிலாகவும் இருந்தது.

தென்ஆசியாவில் வேறு இடங்களில் இல்லாதவாறாக இங்கு விவசாய உடமை, காணியுடமை, நிலவுடமை காணப்படுகிறது.

பலவளங்களைக் கொண்டு பொருளாதார மேல் நிலையில் இருந்த இப்பிரதேசத்தில் இந்த நூற்றாண்டில் விவசாயப்பங்களிப்புக் குறைந்து காணப்படுகிறது. இருப்பினும் சேவைப்பங்களிப்புக்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இயற்கை அழிவுகளான எரிமலை, வரட்சி, வெள்ளப் பெருக்கு, மண்அரிப்பு, மண் சரிவு போன்றவற்றின் பாதிப்புக்கள் குறைவாக இருப்பதால் மக்கள் இடம் பெயர்வு இங்கு அதிகளவில் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை.

இரண்டு இலட்சத்துக்கு அதிகமான மக்கள் மேற்கு ஐரோப்பியநாடுகள், அமெரிக்கா போன்ற இடங்களுக்கு தொழில் நாடி சென்றமை இக்குடாநாட்டு விருத்தியில் பெரும் பங்கை ஆற்றியுள்ளன எனலாம்.

1946 ஆம் ஆண்டுக்குப்பின் குடாநாட்டின் குடிசனத் தொகை மூன்று மடங்காக அதிகரித்த போதிலும் இடம் பெயர்வுகள் பொருளாதார துறையில் அதிக தாக்கத்தை எற்படுத்தவில்லை.

### 1970க்கு பின் உள்ள நிலை

1970க்கு பின்னர் இடம் பெற்ற ஈழப் போராட்டம் யுத்த நிலை அகதிகள் உருவாக்கம், மக்கள் இடம் பெயர்வு, பொருளாதார தடைகள், தொழில் வாய்ப்புக்கள் இழப்பு, மின்சாரமின்மை போன்றவற்றால் குடாநாட்டின் பொருளாதாரம்இரண்டு தசாப்தங்களாக குறைவடைந்தேயுள்ளது. கைத்தொழில்கள் குறுக்கமடைந்துள்ளன. விவசாய, மீன்பிடி போன்ற தொழில்கள் பாதிப்படைந்துள்ளன. கடல் வலயச்சட்டம், மீனவமக்களின் புலம்பெயர்வு, இராணுவநடவடிக்கைகள் போன்றவற்றால் விவசாயம், மீன்பிடித் துறைகளில் பெரும் பின்னடைவு ஏற்பட்டுள்ளது. போதியளவு உள்ளீடுகள் கிடையாமையால் உற்பத்திகள் வெகுவாகக் குறைந்துள்ளன. ஏற்றுமதிப் பொருள்களான புகையிலை, சுருட்டு, மீன், கருவாடு போன்றவை குறைவடைந்துள்ளன.

இருப்பினும் யுத்த தேவை கருதி சுயதேவை விருத்தி செய்யப்படுவது அவசியமாகின்றது.

### அபிவிருத்திக்கான வழிகள்

இடம் பெயர்ந்துள்ள இரண்டு இலட்சம் மக்களும் மீண்டும் தத்தம் பகுதிகளில் குடியேற்றப்பட வேண்டும். வன்னிப் பிரதேசத்தில் போதிய நிலம் இருப்பினும் மக்கள் அங்கு செறிந்து வாழவில்லை. வன்னிப்பிரதேசத்தில் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டு மேலதிக சனத்தொகையை யாழ்ப்பாண நகர்ப் புறங்களில் இருந்து அங்கு இடம் பெயரச் செய்ய வேண்டும்.

### வன்னி வளவிருத்தி

வலிகாமம் பகுதியில் குடிசனம் செறிந்தும், வலிகாமம் வடகிழக்கு பகுதியில் குறைவாகவும் காணப்படுகிறது. வலிகாமம் வடகிழக்குப் பிரதேசம் விவசாய பிரதேசமாக விளங்குதால் அங்கு மக்கள் குடியேற வேண்டும். குடியேற்ற மீன் பரம்பல் ஒன்று ஏற்படுத்தப்பட வேண்டும். வன்னியில் விவசாய குடியிருப்பு உருவாக்கப்பட வேண்டும்.

நன்னீர் ஏரிகள் அங்கு காணப்படுவதால் விவசாய பூமியாக வன்னிப்பிரதேசம் கணிக்கப்பட்டாலும் நமது பிரதேசத்தின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய அளவுக்கு காய்கறிகள், பழவகைகளை அங்கு உற்பத்தி செய்ய முடியும்.

நெல் உற்பத்திக்கான செலவு அதிகமாயிருப்பினும் நெல் உற்பத்தியும் அவசியமாகின்றது. வரட்சியை தாங்கக் கூடிய பயிர்களை இங்கு பயன்படுத்த வேண்டும்.

குடாநாட்டைப் பொறுத்தளவில் கைத்தொழில்கள் அதிகளவில் மேற்கொள்வது கடினம். சிமெந்துக்கான மூலப் பொருள்கள் காணப்படுவதால் சிமெந்து உற்பத்தியை மேற்கொள்ளலாம். மேலதிக வேலைவாய்ப்புகளையோ, கைத்தொழில்களையோ, மீன்பிடி தொழிலையோ தற்போதைய நிலையில் மேற்கொள்ள முடியாதுள்ளது.

### சுற்றுவட்ட புகையிரத பாதை

பொருளாதார அபிவிருத்தி எற்பட போக்குவரத்துக்கான பாதைகள் அபிவிருத்தி செய்யப்படவேண்டும். யாழ்ப்பாண குடாநாட்டுக்குள்ளேயே சுற்றுவட்ட புகையிரதபாதை ஒன்று அமைக்கப்படலாம். அது கொடிகாமம், நெல்லியடி, பருத்தித்துறை வரை எடுத்துச் செல்லப்பட்டு, தொண்டமனாறு பலாலியூடாக காங்கேசன் துறை, சுன்னாகம், யாழ்ப்பாணம், சாவகச்சேரி, கொடிகாமம் என அமைய வேண்டும். இதனால் இந் நிலையங்களை அண்டிய பிரதேசங்கள் விருத்தியடைய வாய்ப்புண்டு. நிலப்பயன்பாடு முழுவதும் இப்புகையிரத பாதையை மையமாக வைத்து செய்யப்பட வேண்டும்.

சர்வதேச விமான நிலையம் ஒன்று அவசியம். அது பலாலியில் அமைக்கப்படலாம். பலாலி வீதி ஒரு களியாட்டம் நடக்கக் கூடிய பாதையாக விருத்தி செய்யப்பட வேண்டும்.

இது போன்ற திட்டங்கள் மக்களின் சம்மதத்துடன் செயற்படுத்தப்பட்டால் யாழ்ப்பாண குடாநடு அபிவிருத்தி அடையும்.

குடாநாட்டின் பொருளாதார அபிவிருத்தியிலேயே எமது வாழ்வும் வளமும் அமைந்துள்ளது. ★


## யா/கலாநிதி ஆ. தியாகராசா ம. ம. வித்தியாலயம்

(காரைநகர்)

மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தமிழீழ பொதுக் கல்வித் தேர்வில் ஊர்காவற்றுறைக் கோட்டத்தில் முதலிரு இடங்களைப் பெறும்;

1ஆம் இடம்
செல்வன் முருகேசு சகாதேவன்
(538 புள்ளிகள்)

2ஆம் இடம்
செல்வன் தர்மலிங்கம் பரஞ்சோதி
(533 புள்ளிகள்)

ஆகியோரையும்

முதனிலைத் தேர்வில் 2 ஆம் இடம் பெறும் செலவன் பாலகிருஷ்ணன் விநோதராசாவையும்
(417 புள்ளிகள்)

**வாழ்த்துகின்றோம்**

அதிபர், ஆசிரியர்கள்,
பெற்றோர், அபிமானிகள்.

[34886]



We Serve

## சர்வதேச லயன்ஸ் கழகங்கள்

306B மாவட்டம்

# பிராந்தியக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம் — 28-1-1995



மேற்படி கருத்தரங்கில் கலந்து கொள்ள யாழ்ப்பாணம் வந்திருக்கும் 306B மாவட்ட ஆளுநர்

லயன் எஸ். சிவபாதசுந்தரம்

அவர்களை அன்புடன் வரவேற்கின்றோம்.

பிராந்தியத் தலைவர், வலயத் தலைவர்கள்,
லயன்ஸ் கழகங்கள்
நல்லூர், யாழ்ப்பாணம், கோப்பாய்,
சுன்னாகம், வட்டுக்கோட்டை சாவகச்சேரி,
மானிப்பாய், வவுனியா, மன்னார்.

(சி-447)



## கலை வர்த்தக கல்லூரி

**C. C. A.**

374, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

**G.C.E.A/L95**

கணக்கியல்
பிரத்தியேக வகுப்பு

**PERSONAL CLASS**

புதிய பிரிவு ஆரம்பம்

ஆசிரியர்: K. சிறி
B Com. (Hons)

ஆரம்பம்:

**30-01-95**

மாலை 5-00 மணி

திங்., செவ்., வியா.,
வெள்ளி 5—6

குறிப்பிட்ட அளவு மாணவர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

நிர்வாகி

(சி-325)



## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை.

1993ஆம்/94ஆம் கல்வி ஆண்டில் சித்த மருத்துவ பயிற்சி நெறியினைப் பயிலுவதற்காக கீழ்வரும் பெயர்களை உடையவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

01. ஜீவபிறிந்தினி. தி
02. றமணி. ந
03. பாலகௌரி. பா
04. தேன்மொழி. கி
05. தமிழினி. ப
06. சிவதர்சினி. க
07. நந்தகுமாரி. ந
08. ஸ்ரீபன் அன்ரன்– றவிறாஜ் ம
09. ஜயசிவானந்தன். இ
10. அநவரதன். வ
11. பிறேம்குமார். வை
12. மாறன் இளங்கோ. வே
13. றெஜிந்தன். கா
14. பாமினி. சா
15. விஜயகுமார். ச
16. பாமினி. பா
17. லோயனா. சி
18. சுஜாந்தினி. தே
19. அனுஷா
20. மேகலை. சி
21. சிவனேசன். வே
22. கீதாகெலன். கீ
23. றஜனி வேர்ஜீனியா. சி
24. கவிதா. தா
25. சொரூபி. ந
26. கிளமென்ரீனா
27. நில்மினி இவன்சலீன்
28. சிவலக்ஷ்மி. சி
29. இராஜவதனா. பூ
30. ஐங்கரன். க
31. கொலெற் றமினா. ம
32. ஸ்ரீகணணதாசன். வே
33. கேதீஸ்வரன். ந
34. ரேணுகா. ஐ
35. சொரூபி. சு
36. ரவிச்சந்திரிகா. தி
37. சுஜாதா. ந
38. தஷாந்தி. சு
39. ஆஷா. சி
40. நிரஞ்சன். ம
41. சசிவதனி. ச

கைதடியில் அமைந்துள்ள யாழ். பல்கலைக் கழக சித்த மருத்துவ பிரிவில் 1995 மாசி 1 ஆம் திகதி (புதன்கிழமை) இவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகவுள்ளன. எனவே, பின்வரும் ஆவணங்களுடன் 1995-01-31 ஆம் திகதி (செவ்வாய்க்கிழமை) காலை 9 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் அனுமதிக்காகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தங்களது பதிவுகளை யாழ். பல்கலைக்கழக பரீட்சைக் கிளையில் மேற்கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

1. பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் புகைப்படப் பிரதியுடன்.
2. பாடசாலை விடுகைப் பத்திரம் புகைப்படப் பிரதியுடன்.
3. கல்வித் தகைமைப்பத்திரம் - க.பொ.த (சாதாரணம்), க.பொ.த. (உயர்தரம்) மொத்தப்புள்ளிக் கூற்று - புகைப்படப் பிரதியுடன்,
4. புகைப்படம் - 8.
5. பதிவுக் கட்டணம் - ரூபா 300/,
6. தேசிய அடையாள அட்டையின் புகைப் படப்பிரதி.

— பதிவாளர்.

(சி-446)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 காவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சேற்றில் ஊற்றிய பால்

தமது நிதி உதவியுடன் ஸ்ரீலங்காவில் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்கள் மந்த கதியில் செயற்படுத்தப்பட்டது குறித்து உலக வங்கியும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் அதிருப்தி தெரிவித்துள்ளன.

கடந்த தசாப்தத்தில் — 80 முதல் 90 வரையான காலப்பகுதியில் — தாம் கோடிக்கணக்கான ரூபா பணத்தை அபிவிருத்தித் திட்டங்களுக்காக வழங்கியபோதிலும், மிகக் குறைந்தளவு திட்டங்களே ஆரம்பிக்கப்பட்டன; மிகமிகக் குறைந்த எண்ணிக்கையான திட்டங்கள் மட்டுமே வெற்றி கண்டுள்ளன என்று இரண்டு வங்கிகளுமே கவலை தெரிவித்துள்ளன.

1990 ஆம் ஆண்டுக்கு முந்திய காலத்தில் மேற்குறிப்பிட்ட இரண்டு வங்கிகளும் வழங்கிய மொத்த நிதியில் 34 சதவீதமானவையே வெற்றிகரமான முதலீடுகளாகின என்று அவை கண்டறிந்திருக்கின்றன.

அவ்வாறாயின், வடக்கு-கிழக்குப் போர் தொடங்கிய பின்னரான கடந்த ஐந்து வருடங்களுக்கென வழங்கப்பட்ட பண உதவியில், பத்துச் சதவீதமாவது பிரஸ்தாப வங்கிகள் குறித்தொதுக்கிய திட்டங்களுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்குமா, அவை வெற்றித் திட்டங்களாகியிருக்குமா என்பது சந்தேகமே!

கடந்த ஐந்தாண்டு காலப் பகுதியில் ஸ்ரீலங்கா அரசுக்குக் கிடைத்த நிதி உதவிகளில் மிகப் பெரும்பகுதி இராணுவச் செலவுக்கு மாற்றப்பட்டது என்பதில் சந்தேகம் இருக்க முடியாது. இராணுவத் தீர்வை நாடி நின்ற முந்திய ஐக்கிய தேசியக் கட்சி அரசினால் வெளியார் நிதி உதவி இன்றிப் போரை நடத்தியிருக்க முடியாது என்பது எவருக்குமே புரியக்கூடிய ஒன்று.

ஆனால் அந்த வேளையில் ஸ்ரீலங்கா அரசுக்கு நிதி உதவி வழங்கிய வெளிநாடுகளும் சரி, சர்வதேச நிதி நிறுவனங்களும் சரி இதனைக் கண்டுகொள்ள மறுத்துவிட்டன.

ஸ்ரீலங்கா அரசுக்குத் தாம் வழங்கும் பண உதவி, உரிய வாறு பயன்படவேண்டும் என்பதில் அவை அக்கறையாக இருந்திருப்பின் போரை நிறுத்துமாறு அப்போதே அழுத்தம் போட்டிருக்கலாம். ஆனால் அவை அதில் சிரத்தை எடுக்கவில்லை. தாம் வழங்கிய பணத்தில் மிகச் சொற்பம் மட்டுமே வெற்றிகரமான முதலீடாகி இருக்கிறது என்று இப்போது கவலைப்படுவது, பாலை வேண்டுமென்றே சேற்றில் ஊற்றிவிட்டு பின்னர் அழுவது போலாகும்!

கடந்த காலப் படிப்பினையை மனதிற் கொண்டு, இனிமேலாவது, உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் மட்டுமன்றி, ஸ்ரீலங்காவுக்கு உதவும் ஏனைய வெளிநாடுகளும் மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

சந்திரிகா அரசு இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு கண்டு, போருக்கு முடிவு காணும் வரை தாம் வழங்கும் நிதி உதவி குறித்து மிகக் கவனமாக இருக்கவேண்டும். சமாதானத் தீர்வைக் கொண்டு வருவதிலிருந்து பின்னடித்து புதிய அரசும் இராணுவத் தீர்வை நாடும் சந்தர்ப்பம் உருவாகும் பட்சத்தில், அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில், தங்கள் அழுத்தங்களைப் போடத் தயாராக இருக்க வேண்டும்.

இப்போதும் கூட, இராணுவத் தீர்வை நாடுவதில்லை, போர் ஒன்று நடக்காமல பார்த்துக் கொள்வோம்; என்று புதிய அரசிடம் நிபந்தனையுடன் கூடிய வாக்குறுதிகளைப் பெற்றுக் கொண்ட பின்னரே நிதி உதவிகளை வழங்க வேண்டும்.

ஆனால் உலக வங்கியைப் பொறுத்த வரையில், தான் போடும் வர்த்தக — பொருளாதார நிபந்தனைகளுக்கு தலை ஆட்டும் எந்த வளர்முக நாட்டு அரசுக்கும், நிதி உதவி வழங்குவதற்கு அது தயாராகவே இருக்கிறது.

ஆகையால் தான் வழங்கிய நிதி உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று கண்டு கொண்டாலும், இனப் பிரச்சினைக்கு சமாதானத் தீர்வு வேண்டும் என்று உலக வங்கி அழுத்தம் போடுமா என்பது ஆழமாகச் சிந்திக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

## வொய்ஸ் ஒவ் அமெரிக்கா நிறுவ அரசு அனுமதி

கொழும்பு, ஜன. 28

இரணைவிலவில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி அஞ்சல் நிலையம் நிறுவும் விடயத்தில் ஸ்ரீலங்கா அரசாங்கத்துக்கும் அமெரிக்க அரசாங்கத்துக்கும் இடையில் இணக்கம் ஏற்பட்டுள்ளது.

பிரஸ்தாப நிலையத்தை நிறுவுவது சம்பந்தமாக சர்ச்சைக்குரிய விடயங்களாக இருந்த ஐந்து அம்சங்கள் குறித்து அமெரிக்க அரசு சில ஒழுங்குகளுக்கு உறுதி அளித்திருப்பதாகவும்—

அதனைத் தொடர்ந்து இரணைவிலவில் "வொய்ஸ் ஒவ் அமெரிக்கா" வானொலி அஞ்சல் நிலையத்தை நிறுவ அரசு அனுமதி அளித்துள்ளதாகவும்— வெளிவிவகார அமைச்சர் திரு. லக்ஷ்மன் கதிர்காமர் தெரிவித்தார்.

பிரஸ்தாப நிலையத்தை நிறுவுவதற்கான புதுப்பிக்கப்பட்ட ஒப்பந்தம் ஒன்று இம் மாதம் 19 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (அ)

### ஆளுநர் காமினி பொன்சேகா

## பதவி ஏற்கும் முன்னரே மேசையில் கோரிக்கைகள்!

திருகோணமலை, ஜன. 28

ஆளுநர் தமது கடமைகளைப் பொறுப்பேற்பதற்கு முன்பு கோரிக்கைகள் அவரது மேசையில் குவியத்தொடங்கியுள்ளன.

காமினி பொன்சேகா ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ளார் என்ற தகவல் வெளியான சில தினங்களில் மன்னாரில் உள்ள சுதந்திரக் கட்சிக்கிளை அவருக்கு ஒரு கோரிக்கையை அனுப்பிவைத்தது.

வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக காஜா மொஹிதீனை மீண்டும் நியமிக்கவேண்டும் என்பதே அக்கோரிக்கையாகும்.

இது அவர் பெயருக்கு வந்த முதலாவது வேண்டுகோளாகும்.

ஜனாப் மொஹிதீனும் தாம் மீண்டும் கல்வி அமைச்சின் செயலாளராக வருவதில் ஆர்வம் காட்டி வருகிறார் என்று மாகாணசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

புதிய ஆளுநர், மொஹிதீனை மாகாண கல்வி அமைச்சின் செயலாளராக மீண்டும் நியமிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவருக்கு அமைச்சர் அஷ்ரஃபின் ஆதரவு இருப்பதே காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

### உடன்பாடு அமுலுக்கு வந்தநாளே

## வேட்டுச் சத்தங்களால் திருமலை நகரில் பரபரப்பு

கொழும்பு, ஜன. 28

இரண்டாவது வாரமாக நீடிக்கும் அரசு—புலிகளுக்கு இடையிலான மோதல் தவிர்ப்பு உடன்படிக்கை அமுலுக்கு வந்த அன்றே திருகோணமலை நகரில் துப்பாக்கி வெடிகள் முழங்கின. இதனால் நகரம் பெரும் பரபரப்புக்குள்ளானது.

வெடிச் சத்தங்களை தொடர்ந்து நகரில் இயங்கிவரும் சில குழுக்களின் அலுவலகங்களுக்கு அருகிலும் பரபரப்பு நிலை காணப்பட்டது.

மக்களும் என்னவோ ஏதோ என்று பீதியடைந்தனர். நகரில் பொலீஸாரும், இராணுவத்தினரும் உஷாராகி விட்டனர்.

விசாரணையின் இறுதியில் அத்துப்பாக்கி வெடிச்சத்தங்கள் திருமலைக் கடற்படைத் தளத்தில் இடம்பெற்றன என்பது தெரிய வந்தது.

கடற்படைத் தளத்தில் தற்செயலாக ஏற்பட்ட வெடிச் சத்தங்கள் அவை என்று சொல்லப்பட்டது. (ஒ-எ-5)

## திருநெல்வேலிப் பகுதியில் நாய்களுக்கு தடுப்பூசி

### திங்களன்று போடப்படும்

யாழ்ப்பாணம், ஜன 28

நல்லூர் பிரதேச சபைப் பிரிவில் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி போடும் பணி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் பின்வரும் சனசமூக நிலையங்களில் தடுப்பூசி போட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

★ காலை 8-30 —9-30 மணி — திருநெல்வேலி காளி கோவிலடி ச. ச. நிலையம்.
★ முற்பகல் 10-30—11-30 மணி — திருநெல்வேலி கலாமன்ற ச. ச. நிலையம்.
★ பிற்பகல் 2—3 மணி — திருநெல்வேலி பாரதி ச. ச. நிலையம்.
★ பிற்பகல் 3—4 மணி — திருநெல்வேலி வாலை அம்மன் ச. ச. நிலையம். (ஐ)

## தேர்தல் கால கொலைகள்; விசாரணை நடத்தப்படும்

### அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, ஜன. 28

கடந்த ஆகஸ்ட் மாதம் நடந்த பொதுத் தேர்தலின் போது இடம்பெற்ற அரசியல் படுகொலைகள் குறித்து விசாரணை செய்யவென அரசு முடிவு செய்துள்ளது.

அமைச்சரவை இதற்கான தீர்மானத்தை எடுத்துள்ளதாக தகவல் துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தெரிவித்தார்.

இந்த தேர்தல் கால வன்முறைகளின் போது சுமார் 30 பேர் கொல்லப்பட்டிருந்தனர். (ஒ-3)

## 2 ஆயிரத்து 500 பேருக்கு ஆசிரியர் நியமனங்கள்

கொழும்பு, ஜன. 28

கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் நிலவி வரும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நீக்குவதற்கு 2 ஆயிரத்து 500 ஆங்கில ஆசிரியர்களை நியமிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி அண்மையில் வெளியாகிய ஆங்கில ஆசிரியர் போட்டிப் பரீட்சை முடிவுகளில் இருந்து 55 புள்ளிகளுக்கு மேல் பெற்றுக்கொண்ட 750 பேருக்கு நியமனம் வழங்கப்படும்.

அத்தோடு மாவட்ட அடிப்படையில் குறிப்பிட்ட புள்ளிகளைப் பெற்றுக்கொண்டவர்களில் இருந்து மேலும் ஆயிரத்து 750 பேருக்கு "டெலிக்" ஆறுமாத கால பயிற்சியின் பின்னர் நியமனம் வழங்கப்படும்.

இந்த நடவடிக்கைகளை கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரன எடுத்துள்ளார்.

இந்நியமனங்கள் தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுக்குரிய நியமனக்கடிதங்களும், "டெலிக்" ஆங்கில ஆசிரியர் பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான கடிதங்களும் தற்போது தயார் படுத்தப்பட்டுவருகின்றன.

## தடை உத்தரவு நீக்கப்பட்டது

மட்டக்களப்பு காரைதீவுப் பகுதியில் இரவு 10 மணிக்குப் பின்னர் மக்கள் நடமாட விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு கடந்த 8 ஆம் திகதியுடன் நீக்கப்பட்டிருப்பதாக விசேட அதிரடிப்படைப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (ஐ)

### மட்டக்களப்பில் மூளைக்காய்ச்சல் தீவிரம்:

# ஒரு லட்சம் சிறுவருக்கும் பன்றிகளுக்கும் தடுப்பூசி!

### சுகாதாரப் பகுதி அவசர நடவடிக்கை

மட்டக்களப்புப் பகுதியில் வேகமாகப் பரவி வரும் மூளைக் காய்ச்சலை தடுப்பதற்காக அங்குள்ள சுமார் ஒரு லட்சம் சிறுவர்களுக்கு அவசரமாகத் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

அதேவேளை அங்கு மூளைக் காய்ச்சல் பரவுவதற்கு காரணம் எனக் கண்டறியப்பட்டுள்ள பன்றிகளுக்கும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் எஸ். குமாரவேற்பிள்ளை இத்தகவல்களைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் மூளைக் காய்ச்சலினால் கடந்த ஒரு சில வாரங்களில் 15க்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். நூற்றுக் கணக்கானவர்கள் ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## கிழக்கில் இன்னும் படையினரின் கெடுபிடிகள் குறைவதாக இல்லை

யாழ்ப்பாணம், ஜன. 28

போர் இடைநிறுத்தம் அமுலில் உள்ள இவ்வேளையில் தென் தமிழீழப் பகுதியில் பரவலாக படையினரின் கெடுபிடி நடவடிக்கைகள் இடம்பெற்றுவருவதாக "புலிகளின் குரல்" வானொலி தெரிவித்தது.

வீதிச் சோதனைகள் முன்னர் போன்று மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்துடன் சுற்றி வளைப்புத் தேடுதல்கள் கைது நடவடிக்கைகள் என்பனவும் இடம் பெற்று வருகின்றன.

மட்டக்களப்பு உன்னிச்சைப் பகுதியில் கடந்த 23 ஆம் திகதி தமிழ்ப் பெண்கள் இருவரைக் கைது செய்த படையினர் அவர்களை முகாமுக்குக் கொண்டு சென்றுள்ளனர்.

கற்குடாப் பகுதியில் விடுதலைப் புலிப் போராளிகள் 7 பேர் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டதும்—

அவர்களது இராணுவ தளபாடங்கள் பறிமுதல் செய்யப்பட்டதும் தெரிந்தவையே. (ஒ-ஐ)

### புலிகளின் குரல் வானொலியில்

**28 — 01 — 1995**

**சனி இரவு**

★ 8-01 — தாயகப்பாடல்
★ 8-05 — நிகழ்வும் பகிர்வும்
★ 8-20 — நேயர் கடிதங்கள்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — கவியரங்கம் — "எள்ளாத எண்ணிச் செயல்வேண்டும்"
★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

**29 — 01 — 1995**

**ஞாயிறு காலை**

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — களத்தில் மலர்ந்தவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி
★ 8-00 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் நிறைவு பெறும்.

### தமிழீழ வானொலி ஒலிபரப்பு

**சனி மாலை**

★ 5-01 சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிக்கீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — வேங்கையின் நெஞ்சம்
★ 5-30 — அறிவியல் வினாடி-வினாப்போட்டி — நாவற்குழி ம. வி. சாவகச்சேரி மகளிர் கல்லூரி ஆகியவற்றுக்கிடையிலான இரண்டாம் சுற்றுப்போட்டி.
★ 6-00 — சிந்தனைக்குச் சில வினாடிகள்
★ 6-02 — பாமாலை
★ 6-15 — என் தெரிவு

## வீதித் திருத்த வேலை பாதிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 28

கடந்த 1994 ஆம் ஆண்டு மட்டும் யாழ். மாநகராட்சி மன்றப் பகுதியில் 80 வீதிகள் திருத்தி புனரமைக்கப்பட்டன. இதற்கு 420 கார் பரல்கள் பயன்படுத்தப்பட்டன.

போதியளவு தார் இல்லாததாலேயே வீதித் திருத்த வேலைகள் பாதிக்கப்பட்டுள்ளன என்று மாநகர சபை அதிகாரி ஒருவர் கூறினார். (ஒ-17)

## வெங்காயத்தில் பனிப்பூச்சியின் தாக்கம்!

வடமராட்சி, ஜன 28

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப் பயிர்கள் பனிப்பூச்சியின் தாக்கத்துக்கு உள்ளாகியுள்ளன.

இதனால் வெங்காயத்தின் தாள்கள் மஞ்சள் நிறமாக மாறி இருப்பதோடு பயிர் சோர்ந்து போயுள்ளது.

தற்போது பெய்து வரும் பனியினால் இத் தாக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஒ-173)

## லயன்ஸ் கழக கருத்தரங்கு

வடமராட்சி, ஜன. 28

லயன்ஸ் கழக யாழ். பிராந்தியக் கருத்தரங்கு சுண்டிக்குளி மகளிர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை நடைபெறும்.

இக் கருத்தரங்கில் லயன்ஸ் மாவட்ட ஆளுநர் எஸ். சிவபாதசுந்தரம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுவார். (ஒ-173)

## விடைத்தாள் திருத்தும் பணி ஆரம்பம்

கொழும்பு, ஜன. 28

கடந்த டிசம்பரில் யாழ். குடா நாட்டில் நடத்தப்பட்ட ஜி. சி. ஈ. சாதாரணப்பத்திரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும்பணி கடந்த 26 ஆம் திகதி ஆரம்பமாக இருந்தது. (ஒ-எ)

### தமிழீழ முதனிலைத் தேர்வில்

## உடுவில் கோட்ட மாணவர் முன்னணி நிலையில்

வலிகாமம் தெற்கு, ஜன. 28

தமிழீழ கல்வி மேம்பாட்டு நிறுவனத்தின் அனுசரணையுடன் கல்வித்திணைக்களத்தால் அண்மையில் நடக்கப் பெற்ற தமிழீழ முதனிலைத் தேர்வில் தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் உடுவில் கல்விக்கோட்டத்தை சேர்ந்த மாணவர்களே முன்னணித் தேர்ச்சி நிலைபெற்றுள்ளார்கள்.

உடுவில் கல்விக்கோட்ட பாடசாலை மாணவர்கள் தமிழ் மொழியில் 46.5 வீதமும் கணிதத்தில் 33.7 வீதமும் ஆங்கிலத்தில் [illegible] வீதமும் சித்தியடைந்துள்ளார்கள். ஏனைய கோட்டங்களில் மாணவர்கள் முறையே தமிழ், கணிதம், ஆங்கிலம் ஆகிய பாடங்களில் பெற்ற சித்தி வீதம் வருமாறு:—

தெல்லிப்பழை கோட்டம் 34.1, 11.5, 19.7.
சண்டிலிப்பாய் கோட்டம் 34.5, 16.9, 19.4.
பருத்தித்துறைக் கோட்டம் 40.6, 27.7, 29.2.
மருதங்கேணிக் கோட்டம் 23.0, 05.5, 04.4.
கோப்பாய் கோட்டம் 36.5, 20.7, 18.3.
கரவெட்டிக் கோட்டம் 36.6, 26.9, 20.7.
[illegible] கோட்டம் 30.8, 20.1, 21.8. (ஒ-152)

## மா தட்டுப்பாடு நீங்கி வருகிறது

வடமராட்சி, ஜன. 28

யாழ். குடாநாட்டில் மாவுக்கு இருந்து வந்த தட்டுப்பாடு ஓரளவு நீங்கி வருகிறது.

இங்குள்ள சில ப. நோ. கூ. சங்கங்கள் பங்கீட்டு அடிப்படையிலும், மட்டுப்படுத்தப்பட்ட அளவிலும் மா விநியோகத்தை ஆரம்பித்துள்ளதால் தட்டுப்பாடு நீங்கி வருகிறது. (ஒ-173)

## ரூ. 20 ஆயிரம் அபராதம்

உயிர் கொல்லியான கசிப்பினை உற்பத்தி செய்வதற்கான உற்பத்திப் பொருளான 20 லீற்றர் கோடாவை உற்பத்தி செய்த உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த ஒருவருக்கு 20 ஆயிரம் ரூபா அபராதமும், 2 மாத சிறைத் தண்டனைக்குப் பதிலாக 2 வருட கால ஒத்திவைக்கப்பட்ட சிறையும் யாழ். மாவட்ட நீதிமன்றின் நீதியாளர் இசையமுதனால் தீர்ப்பளிக்கப்பட்டது. (ஒ)

## ஆட்டுக்கடா திருடியவருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், ஜன. 28

ஆட்டுக்கடா திருடிய இருபாலையைச் சேர்ந்த ஒருவருக்கு 800 ரூபா அபராதமாக செலுத்த வேண்டும் என யாழ் மாவட்ட நீதிமன்றின் நீதியாளர் இசையமுதன் தீர்ப்பு வழங்கினார்.

## வெளியீட்டு விழா

வட. பிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றத்தின் மருத்துவ தின்கள் பத்திரிகை வெளியீட்டு விழாவும், பொதுச்சபை கூட்டமும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மன்றத்தின் பணிமனையில் நடைபெறும். (ஒ-17)

### இன்றைய பரிசளிப்பு விழா:

## சிறப்புப் பரிசு பெறும் மாணவர்களின் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 28

தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவையால் கடந்த ஆண்டு நடத்தப்பட்ட தமிழீழ முதனிலைத் தேர்வில் தேசிய மட்டத்தில் சிறப்புத் தேர்ச்சி பெற்று இன்று நடக்கவுள்ள பரிசளிப்பு விழாவில் பரிசு பெறவுள்ள மாணவர் விவரம் வருமாறு:

**தமிழ்**

பிரனிகா பொன்னம்பலம் (புனித பொஸ்கோ வி. —99) முதலாம் பரிசு

ஆன்ஜெனிற்றா அருளினி அருட்சோதி (தந்தை செல்வா தொ. —99) முதலாம் பரிசு.

கோபாலகிருஷ்ணன் சுதர்சன் [இந்து ஆரம்ப பாடசாலை —99] முதலாம் பரிசு

விமலேஸ்வரி ஆதித்தன் [இந்து ஆரம்ப பாடசாலை—99] முதலாம் பரிசு.

**கணிதம்**

இராஜேந்திரம் குருபரன் [திருநெல்வேலி இ. த. க. பா. — 99] முதலாம் பரிசு.

விதுசியா துரைசிங்கம் [இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை—96] இரண்டாம் பரிசு.

நவரத்தினராசா அச்சுதன் [சரவெட்டி மாணிக்கவாசகர் வி. —96] இரண்டாம் பரிசு.

**சுற்றாடல்**

உபயசேகரம் செந்தூரன் [புனித பொஸ்கோ வி. —100] முதலாம் பரிசு.

யாமினி நடேசன் [சுண்டிக்குளி மகளிர் கல்லூரி—99] இரண்டாம் பரிசு.

ஜோதிந்திரசர்மா சிவராமசர்மா [ஆனைப்பந்தி மெ. மி. த. க. பா. —98] மூன்றாம் பரிசு.

இராசநாயகம் கிஷோக் [புனித பொஸ்கோ வி — 98] மூன்றாம் பரிசு

**ஆங்கிலம்**

சிவராஜா சுகர்மன், சற்குணராஜா நர்மஜன், ஞானசேகரம் அபிஷேக், அலிஸ்ஜோன்சன் பசில், கார்த்திகா பாலசுப்பிரமணியம், காயத்திரி தெய்வகுலரட்ணம், கிருஸ்ணன் ஈழதீபன், பஞ்சலிங்கம் சுமன், சிதாசிவம் செந்தூரன், அன்ரன் ஆன்றூ நிசாநதன், பாலகிருஷ்ணன் கோகிலன், மதுரா கணேசலிங்கம், அனெலா இருசுதந்தினி லூயிஸ், பிறின் சிதிஸ் அருமைநாதன், மங்கா பஞ்சரட்ணம், வெ[illegible] சுவேறா வேதநாயகம், மகேந்தன் பத்மநாதன்

இவர்கள் அனைவரும் புனித பொஸ்கோ வித்தியாலய மாணவர்கள்.

கார்த்திகா இரத்தினராசா, சங்கீதா சோதிலிங்கம், யூஜினி சிவகணேசநாதன் (இவர்கள் மூவரும் திருக்குடும்ப கன்னியர்மடம்)

யாமினி நடேஸ்வரன், சைலஜா உமசங்கர், பிரவீனா பாலச்சந்திரன் (இவர்கள் மூவரும் சுண்டிக்குளி மகளிர் கல்லூரி)

குணசேகரம் மாறனீதரன் (புனித பத்திரிசியார் கல்லூரி)

வரதபவன சதீஸ்குமார் (ஆனைப்பந்தி மெ. மி. த. க. பாடசாலை)

சுபறாபி சுந்தரலிங்கம் [கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை]

யானோஜினி திருலோகநாதன் [யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை]

சலாமயி கணேசகுலசிங்கம் [யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை]

விதுசிகா துரைசிங்கம் [யாழ் இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை]

ஸ்ரீசத்தியசாயினி சோமசேகரம் [யாழ். இந்து ஆரம்ப பாடசாலை]

நாகேஸ்வரன் அகிலன் [யாழ். இந்து ஆரம்ப பாடசாலை]

சிந்துஜா சமதர்மபாலன் (துன்னாலை காசிநாதர் வி.)

நிஷாந்தினி கிருஷ்ணராசா (துன்னாலை காசிநாதர் வி.)

சிவாலி விக்னேராஜா [நெல்லியடி மெ. மி. த. க. பாடசாலை]

செல்வரெத்தினம் அகிலன் [சுழிபுரம் ஐக்கிய சங்க வி.]

சிவராஜா சிரிவக்சன் [பரியோவான் கல்லூரி]

நாகமுத்து சிவராசா [பரியோவான் கல்லூரி]

அனுசா அற்புதராசா [உடுவில் மகளிர் கல்லூரி]

ஆன்ஜெனிற்றா அருளினி அருட்சோதி [தந்தை செல்வா தொ. பாடசாலை]

யசிந்தா இராமச்சந்திரன் [மகாஜனாக் கல்லூரி]

தமிழ வளர்ச்சிக் கழகம் வழங்கும் தமிழ்ப் பாடத்திற்கான பரிசுகள் பெறுவோர்:

**தமிழீழப் பொதுக் கல்வித் தேர்வு**

சுதர்சனா மகேந்திரன் [யாழ்ப்பாணக் கல்லூரி —91] முதலாம் பரிசு.

உமா இராசேந்திரன் [வேம்படி மகளிர் —90] இரண்டாம் பரிசு.

சுகுவாளினி கந்தையா [வேம்படி மகளிர் —90] இரண்டாம் பரிசு.

சங்கீதா தில்லைநாதன் [வேம்படி மகளிர் —90] இரண்டாம் பரிசு.

காயத்திரி அசோகன் [வேம்படி மகளிர் —90] இரண்டாம் பரிசு.

நிரோசு சுபேந்தன் [மானிப்பாய் இந்துக் கல்லூரி —90] இரண்டாம் பரிசு.

**இளநிலைத் தேர்வு**

புவனேந்திரன் ஈழநாதன் [உடுப்பிட்டி அ. மி. கல்லூரி —98] முதலாம் பரிசு.

சயந்தி குகதாசன் [வேம்படி மகளிர் கல்லூரி —97] இரண்டாம் பரிசு.

ஜனனி தில்லைநாதன் [வேம்படி மகளிர் கல்லூரி —97] இரண்டாம் பரிசு.

**முதனிலைத் தேர்வு**

பிரனீகா பொன்னம்பலம் [புனித பொஸ்கோ வித். — 99] முதலாம் பரிசு.

ஆன்ஜெனிற்றா அருளினி அருட்சோதி [தந்தை செல்வா தொடக்கநிலைப்பள்ளி —99]

கோபாலகிருஷ்ணன் சுதர்சன் [இந்து ஆரம்ப பாடசாலை —99] முதலாம் பரிசு.

விமலேஸ்வரி ஆதித்தன் [இந்து ஆரம்ப பாடசாலை —99] முதலாம் பரிசு. (ஒ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழீழப் பரீட்சைகளில் பரிசு பெறுவோர் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 28
தமிழீழ கல்வி மேம்பாட்டுப் பேரவை கடந்த வருடம் நடத்திய தமிழீழமுதனிலைத் தேர்வு, தமிழீழ இளநிலைத் தேர்வு பரீட்சைகளில் கோட்ட மட்டத்தில் சிறப்புப் பரிசுகளை பெறும் மாணவர்களின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

## தமிழீழ முதனிலைத் தேர்வு தேசிய மட்டப் பரிசு பெறுவோர்

ஜோதிந்திரசர்மா சிவராமசர்மா [ஆனைபந்தி மெ. மி. த. க. — 476]
துரைராசா இரஜீவன் [யாழ். இந்து ஆரம்ப பா. — 471]
இலட்சுமணசர்மா கேதாரசர்மா (யாழ். இந்து ஆரம்ப பா. — 466]
நாகமுத்து சிவகரன் [பரியோவான் — 464]
விதுசிகா துரைசிங்கம் [யாழ். இந்து மகளிர் ஆரம்ப பா. — 464]
சிவராஜா பகிரதன் (யாழ். இந்து ஆரம்ப பா. — 464]
சர்மிளா தில்லைநாதன் [யாழ். இந்து மகளிர் ஆரம்ப பா. — 463]
நகுலேஸ்வரம்பிள்ளை யசிவன் [சுன்னாகம் நாகேஸ்வரி வி. — 462]
செல்லத்துரை பிரசாத் [சுன்னாகம் நாகேஸ்வரி வி. — 462]
காயத்ரி சிற்சபேசலிங்கம் [ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தி — 462]

## தமிழீழ முதனிலைத் தேர்வு

### நல்லூர்

பழனிமலைநாதன் சைலஜன் [யாழ் இந்து ஆரம்ப பா. — 458]
அம்பலவாணர் இந்திரகுமார் [யாழ் இந்து ஆரம்ப பா. — 457]
புராதினி குணநாயகம் [கொக்குவில் இந்து ஆரம்ப பா. — 448]

### யாழ்.

கார்த்திகா பாலசுப்பிரமணியம் [புனித பொஸ்கோ வி. — 457]
சண்முகசுந்தரம் கர்ணன் [பரியோவான் — 456]
பிரயந்தின் கமலசிங்கம் [சுண்டுக்குளி மகளிர் — 454]

### சாவகச்சேரி

விவேகானந்தன் கோகுலன் [சாவகச்சேரி மகளிர் — 459]
குமாரசாமி ரகுராம் [சாவகச்சேரி இந்து ஆரம்ப பா. — 457]
சோபிகா பாலச்சந்திரன் [கல்வயல் சிறி சண்முகானந்த வி. — 455]

### உடுவில்

அம்பிகைபாகன் றஜீத் [ஏழாலை தெற்கு அ. மி. த. க. பா. — 460]
சுந்தரமூர்த்தி மாறன் [இணுவில் மத்திய கல்லூரி — 458]
சிறீசிவதாஸ் ஊம்சானந்த் (இணுவில் மத்திய கல்லூரி — 455]

### சங்கானை

செல்வரத்தினம் அகிலன் [சுழிபுரம் ஐக்கிய சங்கம் வி. — 458]
சிவஞானசுந்தரம் உமைபாலன் [பொன்னாலை சிறி வரதராஜப் பெருமாள் வி — 438]
சாந்தினி மயில்வாகனம்[பண்ணாகம் மெய்கண்டான் வி. — 437]

### தெல்லிப்பழை

யசிந்தா இராமச்சந்திரன் [மகாஜனா — 451]
பாலச்சந்திரன் பிரணவன் [மகாஜனா — 449]
வினித்திரா வேலாயுதபிள்ளை [தந்தை செல்வா தொடக்க நிலைப்பள்ளி — 449]

### ஊர்காவற்றுறை

தணிகாசலம் தயாபரன் [வலந்தலை தெற்கு அ. மி. த. க. பா. — 423]
பாலகிருஷ்ணன் வினோதராசா [கலாநிதி ஆ. தியாகராசா ம. வி. — 417]
வேலாயுதபிள்ளை மயூரன் [யாழ்ரன் கல்லூரி — 417]

### வேலணை

பாலசூரியன் வாசகன் [வேலணை சைவப்பிரகாச வி. — 407]
கார்த்திகா மகேஸ்வரன் [வேலணை சைவப்பிரகாச வி. — 399]
சுகந்தா ஏகாம்பரம் இறுப்பிட்டி அ.மி.த.க.பா.—395]

### சண்டிலிப்பாய்

வேணி துரைசிங்கம்[மானிப்பாய் விவேகானந்தா வி. — 429]
ஜனனி சந்திரராசா [கட்டுடை சைவ. வி — 426]
கலைநேசன் தர்ஷன் [சுதுமலை சின்மய பாரதி வி. — 421]
கௌசல்யா விமலநாதன் [பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி — 421]

### பளை

விஜதா வரதராஜன் [பளை மத்திய கல்லூரி — 431]
சந்திரசேகர் திவாகர்[பளை மத்திய கல்லூரி — 414]
சயிந்தகுமாரி சேனாதிராசா [பளை மாசார் அ. த. க பா. — 344]

### கோப்பாய்

வதனி ஜெயரட்ணம்[கோப்பாய் மகா வி. — 442]
முத்தையா ஜயந்தகுமார் [அச்சுவேலி ம.வி. — 437]
நிரோஷானி ஜெயராசா [புத்தூர் சோமாஸ்கந்தாக் கல்லூரி — 434]

### கரவெட்டி

சிந்துஜா தர்மராஜன் [துன்னாலை காசிநாதன் வி. — 445]
சிவராமலிங்கம் குமரேசன் [கரவெட்டி விக்னேஸ்வரா — 441]
ஆறுமுகம் பரணி[கரவெட்டி விக்னேஸ்வரா — 440]
முத்துராசா வருண் பிரசாந்த் [துன்னாலை காசிநாதர் வி — 440]

### பருத்தித்துறை

தயாநிதி சங்கர் [வல்வை அ.மி க பா. — 444]
தனுஜா மோகனகுமார் [மேலைப்புலோலி சைவப்பிரகாச வி. — 441]
அபிராமி சண்முகதாஸ் [மெதடிஸ் மிசன் த. க பா. — 441]

## தமிழீழ இளநிலைத் தேர்வு

### நல்லூர்

அரியரத்தினம் பார்த்தீபன் (யாழ். இந்து — 688)
இராஜாஜி நேரு (யாழ். இந்து — 686)
குணரட்ணம் செந்தூரன் (யாழ். இந்து — 679)

### சண்டிலிப்பாய்

சுமந்திரை இராமசாமி (பண்டத்தரிப்பு மகளிர் — 624)
துஷ்யந்தி தர்மராஜசிங்கம் (மானிப்பாய் மகளிர் — 575)
அனுசா விஜயானந்தன் (மானிப்பாய் மகளிர் — 563)

### பருத்தித்துறை

சிவகலா சிவசுப்பிரமணியம் (மெதடிஸ்த பெண்கள் — 684)
சுமதிசோதி நாகரத்தினம் (மெதடிஸ்த பெண்கள் — 680)
சபாரத்தினம் விமலேஸ்வரன் (ஹாட்லிக் கல்லூரி — 674)

### பளை

சரிதா இரத்தினசிங்கம் (வேம்பொடுகேணி சி. சி. த. க பா. — 574)
தவராசா பகிரதன் (வேம்பொடுகேணி சி.சி.த க.பா. — 494)
யாழினி இராஜரட்ணம் (பளை மகா வித்தியாலயம் — 461)

### சாவகச்சேரி

மதுநந்தினி சதாசிவசர்மா (சாவகச்சேரி இந்து — 666)
பூபாலசிங்கம் சுப்பிரமணியசிவா (சாவகச்சேரி இந்து — 647)
சுந்தரலிங்கம் வினோதன் (சாவகச்சேரி இந்து — 638)

### வேலணை

திவாஜினி தனபாலசிங்கம் (புங்குடுதீவு ம. வி — 544)
சுந்தசாமி செல்வக்குமார் (வேலணை சைவப்பிரகாச வி — 526)
வதனரூபா ஏகாம்பரம் (புங்குடுதீவு சிறீசுப்பிரமணிய வி. — 490)

### ஊர்காவற்றுறை

தங்கவேல் சிவரூபன் (யாழ்ரன் கல்லூரி — 647)
பரமசிவம் சிவமயூரன் (யாழ்ரன் கல்லூரி — 593)
தேன்மொழி பேரின்பநாயகம் (சுந்தரமூர்த்தி நாயனார் வி — 567)

### மருதங்கேணி

வெற்றிவேல் செந்தூரன் (ஆழியவளை சி சி.த.க.பா. — 489)
மேரி றெசில்டா சந்தியோகு (செம்பியன்பற்று அ த.க.பா. — 474)
இளையதம்பி நித்தியராஜ் (குடத்தனை அ. த. க பா — 4?5)

### சங்கானை

கிரிஜா மகேந்திரன் (யாழ்ப்பாணக் கல்லூரி — 682)
ஹேமா காந்தராஜா (யாழ்ப்பாணக் கல்லூரி — 675]
சிதம்பரநாதன் சேயோன் (யாழ்ப்பாணக் கல்லூரி — 669)

### தெல்லிப்பழை

கல்பனா மகேந்திரராஜா (யூனியன் — 682)
ஆனந்தராசா சாயிராம் [யூனியன் — 669]
அனுஷா பூலோகசேகரம் [யூனியன் — 666]

### உடுவில்

சத்தியசீலா தர்மகுலசிங்கம் [உடுவில் மகளிர் — 682]
காயத்திரி இராஜரட்ணம் [உடுவில் மகளிர் — 649]
சுதாஜினி சிவபாதசுந்தரம் [உடுவில் மகளிர் — 647]

### கோப்பாய்

சுபோதினி சிறீயோனந்தன் (புத்தூர் சோமஸ்கந்தா — 611)
இந்திரராசா சஜேந்திரன் [அச்சுவேலி ம.வி. — 608]
லதா தம்பி [இடைக்காடு ம.வி. —607]

### கரவெட்டி

அரியநாயகம் தஸ்யந்தன் [உடுப்பிட்டி அ மி. கல்லூரி —674]
புவனேந்திரன் ஈழநாதன் [உடுப்பிட்டி அ. மி கல்லூரி — 656]
பாலகிருஷ்ணன் மனோஜா [விவேகானந்தா வி. — 651]

### யாழ்ப்பாணம்

பத்மப்பிரியா நாகேந்திரன் [வேம்படி மகளிர் — 685]
றொஷேல் பொன்னையா [திருக்குடும்பக் கன்னியர் மடம் —681]
தர்மிளா நாகேஸ்வரன் [வேம்படி மகளிர் —683]

[ 5 ஆம் பக்கமும் பார்க்க ]

## சித்த மருந்து விநியோக கலந்துரையாடல்

யாழ் மாவட்ட பிரதேச சபை செயலாளர்களுக்கும், சித்த வைத்திய அதிகாரிகளுக்குமான கலந்துரையாடல் நாளை ஞாயிறு காலை 10 மணிக்கு கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் (ப/ தெ) திரு. தி. சபாரத்தினம் தலைமையில் கூட்டுறவு அலுவலகத்தில் நடைபெறும்.

எல்லா பிரதேச சபை செயலாளர்களும் வைத்திய அதிகாரிகளும் அழைக்கப்பட்டுள்ளார்கள்.

தமிழீழ நிர்வாக சேவைப் பிரதிநிதிகள் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளுகின்றார்கள்.

---

## நாடுதிரும்பும்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களை அமுல்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளித்துள்ளது.

சுவிஸ் அரசு கடந்த வருட நடுப்பகுதியில் இருந்தே ஈழ அகதிகளை சிறுசிறு குழுக்களாகத் திருப்பி அனுப்பி வருகிறது.

இலங்கையில் நிலைமைகள் எப்படி இருக்கின்றன என்பதை ஆராய்வதற்காக நோர்வே அதிகாரிகள் குழு ஒன்று வடபகுதிக்குச் சென்று திரும்பியுள்ளது.

இந்தியாவில் இருந்து தமிழ் அகதிகள் தாமாகவே முன்வந்து நாடு திரும்பிக்கொண்டிருக்கின்றனர். எனவே நாடு திரும்பும் தமிழர்கள் மீது அரசின் அச்சுறுத்தல் எதுவும் இருக்க முடியாது என்று அந்தக்குழு தெரிவித்துள்ளது

இலங்கையில் நடக்கும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து மேற்குலக நாடுகள் திருப்தி கொண்டிருப்பது போல் தெரிகிறது.

அதேவேளை — பேச்சு வார்த்தை நிச்சயம் வெற்றி பெறும் என்ற தீர்க்கமான உறுதிகள் இன்னும் தோன்றவில்லை என்று அகதிகள் நலனில் அக்கறை கொண்டுள்ள குழுக்கள் தெரிவித்துள்ளன.

ஏற்கனவே இலங்கைக்குத் திரும்பிய அகதிகளின் நிலை குறித்து எதுவுமே பெரிதாகத் தெரியவில்லை.

சில வீடுகளும், முகாம்களும் அமைக்கப்பட்டதைத் தவிர நாடு திரும்பிய அகதிகளுக்காக எந்தவித நலவாழ்வுத் திட்டங்களும் தென்பகுதியில் மேற்கொள்ளப் படவில்லை.

மேற்கு நாடுகளில் தமிழர்கள் மட்டுமன்றி சிங்களவர்களும் அகதிகளாக உள்ளனர் — என்றும் அதில் குறிப்பிடப்பட்டது [ஐ]

## படையினர் விடுவித்த கடற்புலிகள்

கொழும்பு, ஜன. 28
மட்டக்களப்பு கற்குடாபகுதி கடற்பரப்பில்வைத்து கடந்த 24 ஆம் திகதி கைது செய்யப்பட்ட ஏழு கடற்புலிகளையும், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட ஒரு லட்சத்து 89 ஆயிரம் ரூபா பணத்தையும் விடுதலைப்புலிகளின் தளபதியான விக்கி என்பவரிடம் ஒப்படைத்துள்ளதாக மட்டக்களப்புபிராந்திய இராணுவ அதிகாரி 'லங்கா தீபவுக்குத்' தெரிவித்தார்.
(இ-ஐ)

# 5ஆம் ஆண்டு புலமை பரிசில்மாணவர் எண்ணிக்கை 10 ஆயிரமாக உயரும்

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் வழங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதென அரசாங்கம் தீர்மானித்திருக்கிறது.

இப்பொழுது 7 ஆயிரத்து 500 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கப்படுகிறது.

அடுத்த ஆண்டில் இருந்து இந்த எண்ணிக்கை 10 ஆயிரமாக அதிகரிக்கப்படும்.

கல்வி, உயர் கல்வி அமைச்சர் றிச்சட் பத்திரன இதனைத் தெரிவித்தார்.

புலமைப் பரிசிலுக்கான வெகுமதியையும் அதிகரிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தமாணவர்கள், அடுத்த மாதம் 15 ஆம் திகதியளவில் தாம் விரும்பும் பிரபல பாடசாலைகளில் சேர்ந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

தமிழ் மொழி மூல மாணவர்கள் மற்றொரு தினத்தில் அனுமதியை பெறுவார்கள்.

வடபகுதியைச் சேர்ந்த மாணவர்களதுபெற்றோர்களிடமிருந்து பாடசாலை அனுமதி தொடர்பான விண்ணப்பபத்திரங்கள் அமைச்சுக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் மொழி மூல பாடசாலைகளில் மாணவர்களை சேர்த்துக் கொள்வது பற்றி அடுத்த மாத ஆரம்பத்தில் தீர்மானிக்கப்படும் என்று அவர் கூறினார். [இ-4]

வலிகாமம் மேற்கில்

# ப.நோ.கூ. சங்கங்களுக்கிடையே விலை வித்தியாசம் நீங்கவேண்டும்

## இணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு

அராலி, ஜன. 28
ஒரே பிரதேசத்தில் உள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் பாவனைப் பொருள்களை வெவ்வேறு விலைகளுக்கு விற்பதைத் தவிர்க்க வேண்டும். விலை வித்தியாசங்களை நீக்க வேண்டும்.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர்பிரிவின் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இவ்வாறு முடிவு எடுக்கப்பட்டது.

ஒருங்கிணைப்புக் கூட்டம் பிரதேச செயலக மண்டபத்தில், பிரதேச செயலாளர் திரு. க. சந்திரராசா தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அப்போது இடம்பெயர்ந்து வலிமேற்குப் பகுதியில் இயங்கும் காரைநகர் ப. நோ கூ. சங்கம், பண்டத்தரிப்பு, ப. நோ.கூ சங்கம், மற்றும் சங்கானை ப.நோ கூ. சங்கம் ஆகியவற்றின் விலைகளில் வித்தியாசம் இருப்பது சுட்டிக் காட்டப்பட்டது.

அதனைத் தொடர்ந்தே மேற்கண்ட தீர்மானம் எடுக்கப்பட்டது.

பாடசாலைகளில் பிள்ளைகளை அனுமதிக்கும்போது நன்கொடையாக பணம் அறவிடக்கூடாது என்ற அரசாங்க உத்தரவை மீறி வலிகாமம் மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பல பாடசாலைகளில் அனுமதிக்காக பணத்தை அறவிடு செய்வதாகவும் கூட்டத்தில் முறையிடப்பட்டது.

வசதியற்ற குடும்பங்களிடமும், இடம்பெயர்ந்து வந்துள்ள குடும்பங்களிலிருந்தும் கட்டாயப்படுத்தி நன்கொடைப்பணம் அறவிடப்படுவதாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது.

வலிமேற்கு கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் இதற்குப் பதிலளிக்கையில் —

அனுமதிக்காக எந்த மாணவர்களிடமிருந்தும் பணம் அறவிடக்கூடாது என்பது அரசாங்கத்தின் தெளிவான உத்தரவு.

ஆனால் எமது பிரதேசத்தின் பாடசாலைகளிலுள்ள வசதியீனங்களை ஓரளவு சீர்செய்வதற்காக பாடசாலை அபிவிருத்திச் சபைகள் மாணவர்களின் பெற்றோரின் சம்மதத்துடன் சிறிதளவு நன்கொடைகளைப் பெற்று வருகின்றார்கள். ஆனால் அனுமதிக்காக கட்டாயப்படுத்தி பணம் அறவிடக்கூடாது — என்று கூறினார்.

### மரணச் சடங்குக்கு விறகு

ஏழை மக்கள் மரணச் சடங்குகளுக்கான விறகை கொள்வனவு செய்ய இயலாத நிலையில்இருப்பதால் மரணச் சடங்குக்குரிய விறகை பிரதேச செயலாளரின் அனுமதியுடன் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தினூடாக குறைந்த விலையில் வழங்க பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தை கோருவது எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

பொதுமக்களுக்கு பங்கீட்டு அடிப்படையில் தொடர்ந்து 5 லீற்றர் மண்ணெண்ணெய் வீதம் வழங்கப்படுகிறது. அந்த மண்எண்ணெய் வீட்டு தேவைக்காக எரிபொருளாக பயன்படுத்துவதால் மரங்கள் தறிக்கப்படுவதை குறைப்பதுடன், பொருளாதார சுமையையும் ஓரளவு குறைத்துக்கொள்ள முடியும் எனவும் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டது.

இணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ விற்பனைத் திணைக்களத்தின் கிளை ஒன்றை இப்பிரதேசத்தில் திறந்து மக்களுக்கு பொருள்களை விநியோகிக்கக் கோருவது

★ ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் நிதி உதவி மூலம் 6 லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்ட பொன்னாலைக்குளம் விவசாயிகளால் பராமரிக்கப்படவில்லை என்பதால் அதனை பெரும்பாக உத்தியோகத்தரும அப்பகுதி கிராம உத்தியோகத்தர்களும் விவசாயிகளை இணைத்து பராமரிக்க வேண்டும்.

★ அடுத்த போகத்தில் 600 ஹெக்டேர் பரப்பளவில் என்னும், 200 ஹெக்டர் பரப்பளவில் ஏனைய சிறுதானியங்களும் பயிர் செய்யப்பட இருப்பதால் தேவையான விதை தானியங்களை பசுமை நிறுவனத்துடன் இணைந்து கமநல சேவைத் திணைக்களம் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

★ அராலிப் பகுதியில் பம்பாய் வெங்காயச் செய்கைக்காக மக்கள் வங்கி கடனுதவி வழங்குவதற்கு சம்மதம் தெரிவித்து இருப்பதால் பம்பாய் வெங்காய உற்பத்தியாளர் சங்கத்தினூடாக கடனைப்பெற்று வழங்குதல்.
[அ-12]

---

## அலரி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வுக்குள் கொண்டு வருவதற்கு பொறுப்பாக இருந்த படைவீரர்களை உறுதிப்படுத்தவும் பொருத்தமான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

இந்த சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இராணுவ அதிகாரிகளின் உறவினர்களும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டார்கள். அவர்களின் வீடுகளும் சோதனைக்கு உள்ளாகின.

கொழும்பிலும் வெளியூர்களிலும் சி ஐ.டி பிரிவினர் விசாரணைகளை நடத்தினார்கள்.

இந்த வெடி மருந்துகளை அலரிமாளிகைக்குள் கொண்டு வருவதற்கு பொறுப்பாக விருந்த இரண்டு படைவீரர்களும் சி ஐ.டி. பிரிவினரால் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டனர் அதன் பின்னர் அவர்கள் இராணுவ அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இந்த வார ஆரம்பத்தில் சி.ஐ டி. பிரிவினர் சமர்பித்த அறிக்கையில் படைவீரர்கள் வசமிருந்த வெடி மருந்துப் பொருள்கள் அங்கீகாரம் பெறப்பட்டவை அல்ல என குறிப்பிடப்பட்டுள்ளது.

அவர்கள் தெரிவித்த கருத்துக்களின்படி இவற்றை வைத்திருப்பதற்கான நோக்கமும் ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல இந்த படைவீரர்களுக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்குமாறு சிபார்சு செய்யப்பட்டுள்ள - அலரி மாளிகைக்குள் இந்த பாதுகாப்பு குறைபாடுகள் இருந்தது இதற்கு காரணமாகும். சரியான சோதனைகளை மேற்கொள்ளப்படவில்லை என்று இந்த அறிக்கை கூறுகின்றது.

இந்த குறைபாடுகளை நீக்குவதற்கு சிபார்சுகள் செய்யப்பட்டுள்ளன. சி ஐ டி யினரின் சிபார்சுகள் கிடைக்கப்பெற்றதைத் தொடர்ந்து அலரி மாளிகையின் பாதுகாப்பு பிரிவு மறுசீரமைக்கப்படுவது தொடர்பாகவும் பாதுகாப்பு வழங்கப்படுவது சம்பந்தமாகவும் விரிவான திட்டம் ஜனாதிபதியின் அங்கீகாரத்துக்காக நேற்று முன்தினம் சமர்ப்பிக்கப்பட்டது.

இந்த திட்டத்திற்கு அமைய பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமிடத்து ஜனாதிபதி அலுவலகத்தில் அவை அமுல் செய்யப்படுகின்றன. [இ-4]

## திருடர்கள் கைவரிசை

தென்மராட்சி.ஜன 28
வீட்டுக்காரர் திருமண நிகழ்ச்சிக்கு சென்றிருந்த வேளையில் வீட்டினுள் புகுந்த திருடர் அங்கிருந்த 75ஆயிரம் ரூபா பணத்தையும் 65ஆயிரம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் திருடிச் சென்ற சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் கச்சாய் வீதியில் இடம்பெற்றது.
(ஐ-117)

---

## பத்திய...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண கல்விப்பணிப்பாளர் டபிள்யூ. ராஜபக்ஸவை தான் அங்கீகரிக்கப்போவதில்லை என சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் எச். ஆர். ஜயதிலக்க பொடிநிலமே சப்ரகமுவ மாகாண சபைக்கு அறிவித்துள்ளார்.

மேற்படி மாகாண கல்விப் பணிப்பாளர் பதவிக்கு சப்ரகமுவ மாகாண அரசாங்க சேவை ஆணைக் குழுவின் சிபார்சுடன் டபிள்யூ. எம். டி ஏ பண்டார என்பவரை கல்விப் பணிப்பாளராக நியமித்துள்ளதாகவும் முதலமைச்சர் அறிவித்துள்ளார்.
(இ)

## மரண அறிவித்தல்கள்

### சேதுபதி சோமசுந்தரேசன்

இளைப்பாறிய ஆசிரியர் (P. T I.)

புங்குடுதீவைப் பிறப்பிடமாகவும் அல்வைப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட சேதுபதி சோமசுந்தரேசன் ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேதுபதி (இளைப்பாறிய ஆசிரியர்) - கண்மணியம்மா தம்பதிகளின் அன்புப் புதல்வனும், காலஞ்சென்றவர்களான அருளம்பலம் விதானையார்) - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், புவனேஸ்வரியம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், ராஜன்சேதுபதி [ஜேர்மனி], திருமதி சுமதி ஜெகதீஸ்வரநாதன் [ஜேர்மனி], பாலன் சேதுபதி [ஜேர்மனி], ராதா சேதுபதி [ஜேர்மனி], சுகந்தி [கொழும்பு] ஆகியோரின் அன்புத் தந்தையும், லீசா [ஜேர்மனி], ஜெகதீஸ்வரநாதன் [ஜேர்மனி], நளாயினி [ஜேர்மனி] ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்றவர்களான Dr. மீனாட்சி சுந்தரேசன், ஆலாலசுந்தரேசன், சிவயோக சுந்தரேசன் மற்றும் Dr. சிவஞானசுந்தரம், சண்முகசுந்தரம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சே, சண்முகசுந்தரம்
[சகோதரன்]

1 பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
[34892]

### சின்னத்தம்பி கந்தையா

(புங்குடுதீவு- 9)

புங்குடுதீவு - 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா திருநெல்வேலியில் நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற சிதேவிப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பிள்ளையினார் - தாமாசிப்பிள்ளையின் அன்பு மருமகனும், திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி (கனடா), பொன்னம்பலம J P ஆகியோரின் அன்புத் தந்தையாரும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் [முன்னாள் பெல்மதுளை, வர்த்தகர்], பரமேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும், சொர்ணலிங்கம் (ஜேர்மனி), கனடாவில் வசிப்பவர்களான சந்திரகலை, சிவகலை, ஞானகலை, சுவிஸைச் சேர்ந்த ஞானச்சந்திரன், உமாச்சந்திரன் (கனடா), சிவானந்தன் தனலட்சுமி (சுவிஸ்), வரதராஜன் (சுவிஸ்), சிறீஸ்கந்தராஜா [சுவிஸ்], திருக்கேதீஸ்வரன் (சுவிஸ்), ஜெயலட்சுமி - ஜெயரூபன், வாகீஸ்வரன், பாலீஸ்வரன் ஆகியோரின் அன்பு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (28-01-95) எமது இல்லத்தில் நடைபெற்று பி. ப. 2 மணியளவில் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு பூதவுடல் எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. பொன்னம்பலம் J. P.
(மகன் - புங்குடுதீவு- 11)
உலக தமிழர் பண்பாட்டுகழக,
ஆட்சிகுழு உறுப்பினர், இலங்கை

119/3, முன் ஒழுங்கை,
(திட்டவீதி)
பலாலி வீதி,
திருநெல்வேலி.
(34890)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிற்றெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 28 - 01 - 1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org